OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
18 APR 1911
MADRAS.

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

**மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.**

## முதற்றொகுதி.

1910 ௵ மே௴ 15௳ முதல் 1911 ௵ ஏப்பிரல் ௴ 15௳ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 18 APR 1911 MADRAS.



# உள்ளுறை.


அன்னிபெஸன்ட் அம்மையாரின் பிரஸங்கம். ஸ்ரீராம். ... ௪௰

அவதாரங்களின் முக்கியமாக பரசுராம அவதாரத்தின் உண்மை. } தி. சதாசிவஅய்யர் ௮௬, ௧௰௬, ௧௪௯.

அலெக்ஸாண்டர் சக்ரவர்த்தியும் ஒரு பிராஹ்மண உத்தமரும். } ஆத்மநாதன். ... ௨௫௨.

ஆகம சைவம். என். பிச்சைபிள்ளை. ... ... ௧௭௰.

இந்திய புத்திரர்களின சங்கம். } ப. நா. & எஸ். வி. சுப்பிரமணிய அய்யர் ௨௨௪.

இந்தியாமுழுவதும் ஒரேபாஷையும் ஒரேலிபியும் இருத்தற்பாலது. } ப. நா. ... ௩௰௧.

இந்தியாதேசம்நலம்பெறும்முறை. சிவராமசுப்பிரமணியன். ௩௮௫.

இகபரவாழ்க்கை. மு. ரா. கந்தசாமிக் கவிராயர் ... ௩௧௯.

ஏகாதசி விரதம். வி. இராமச்சந்திர நாயக்கர். ... ௫௩.

ஒரு சூரியசம்பிரதாயம் ஒரு பிரஹ்மாண்டம். } வெங்குஸ்வாமி அய்யர். ... ௨௧௯.

ஒரு ஜீவன் ஒரு சரீரம்விட்டு மறுசரீரம் பெறும்வரையிலுள்ள மத்தியகாலம். } சிவராமசுப்பிரமணியன். ௩௪௭.

கணபதியும் அவருடைய உண்மையும். ப. நா. ... ௨௨.

கர்மவிதியின் உண்மை. வி. வெங்குஸ்வாமி அய்யர். ... ௭௪.

கீழான பிராணிகளும் நம்முடைய உத்திரவாதமும். ... ௧௩௫.

கீடம் பிரமரமாதல் (புழுவண்டாதல்)என். எஸ். ஜம்புநாதன். ௩௬௧.

குழந்தைகளுடன் நாம்பழகும்முறை } சிவராமசுப்பிரமணிய அய்யர் ௧௯௭.

குண்டலிநீசக்தி. ப. நா. ... ... ௩௯௨.

ஸ்ரீமத் சங்கராசார்யஸ்வாமிகளின் சரித்திரச் சுருக்கம். ப. நா. ௧௯.

சக்ரவர்த்தி அவர்களின் ஸ்ரீமுகம். ... ... ௯௩.

சங்கீதம்: அதன் உயர்வும், தாழ்வும். } பி. எஸ். சுப்பிரமணிய அய்யர். ௮௧, ௧௧௰, ௧௬௰.

ஸ்ரீசதாசிவபிரஹ்மேந்திரர். எஸ். ஸ்வாமிநாதையர். ௧௪௰. ௨௯௨.

சநாதன தர்மம் என்றால்என்ன. டி. எஸ். தியாகராஜஞானியார். ௧௧௯.

சமாசாரம்:—


அபூர்வ சிலா சாஸனம் ... ... ... ௧௩௪.

அமெரிக்காவில் இந்தியர்கோவில் ... ... ௧௬௫.

ஆகாச கமனம் ... ... ... ... ௧௯௬.

ஆதியாற்றில் பிரஹ்மஞான மஹாசபை. ... ௨௩௮, ௨௪௨.

ஆமை ஓட்டின் வியாபாரம் ... ... ... ௨௭௮.

இராஜாங்கங்களுக்குள் சண்டைகளைத்தொலைக்க ஏற்பட்ட சபை. ௧௩௦.

இராஜகுமாரன் காலேஜ்சென்னையில் ஸ்தாபிக்கிறதாக உத்தேசம். ... ... ௧௬௫.

எட்வார்ட் சக்ரவர்த்தி அவர்களின் மரணம். ... ௩௨௦.

ஏனங்குடியில் தஞ்சாவூர் பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின்கூட்டம். ௧௯௬, ௧௯௫.

ஒரு வித்தியாசாலைக்கு நன்கொடை. ... ... ௨௩௭.

கள்ளிக்கோட்டை பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின்கூட்டம். ௨௯.

கல்வி விஷயமான ஒருபெரியநன்கொடை. ... ௧௬௩.

கரு ஈயம் எழுதுகோல் உண்டுபண்ணுதல். ... ... ௨௩௬.

கங்காஜலத்தின் மகிமை. ... ... ... ௨௩௭.

கும்பாபிஷேகங்கள்: திருப்பளாத்துறை, பழநி. ... ௯௭.

கைக்வார் மஹாராஜா ஜப்பான் யாத்திரை. ... ... ௯௬.

கோழிமுட்டை வெந்தது வேகாதது அறியும் முறை. ௩௭௫.

செங்கல்பட்டு பிரஹ்மஞான கிளைச்சபை வெண்டாமரைநாள். ௭௪.

சென்னை ஸம்ஸ்கிருத வித்தியாசாலை. ... ... ௧௩௨.

சேவைசாதன்—பம்பாய். ... ... ... ௧௩௦.

டிசம்பர்மீ த்தின் சபைகள், கண்காக்ஷிகள். ... ... ௩௧௧.

தபாலாபீஸின் அபிவிருத்தி. ... ... ... ௧௬௪.

தந்திஆபீஸின் அபிவிருத்தி. ... ... ... ௧௬௫.

தஞ்சாவூர்ஜில்லா போர்டின் வைத்தியசாலைச் செலவு. ... ௧௬௫.

துலாராசியில் ஏழுகிரகங்கள்கூடுதலினால் ஜனங்களுக்கு உண்டாகும் பீடை. ... ... ௨௪௦.

தொண்ணூறுநாள் அன்னம் ஆகாரமில்லாமல் இருத்தல். ௩௭௫.

தோல் உரியும் மனிதன். ... ... ... ௩௧௦.

நாகபட்டணத்தில் 10 மாதகாலமாய் அன்னாகாரமின்றி சமாதியில் இருக்கின்ற ஒரு பெரியவர் ௨௩௫.

பல மதங்களுள் சிநேக பாவம் உண்டாக வேண்டிய ஒரு சபை ஆலகபாத்தில் ... ... கஙங.

பக்ஷிகளின் நாசம் ... ... கசாங.

பரோடா ராஜ்ஜிபத்தின் புத்தகசாலைகள் ... உஙரு.

பகிரதி நதியின் வைத்தியசாலைப்படகு ... ... உஎஅ.

பலமதங்களின் கூட்டுறவு ... ... ஙஎசா.

பங்களூரில் ஸம்ஸ்கிருத வித்தியாசாலை பிரதிஷ்டை ஙஎஎ.

பலஜாதிகளின் காங்கிரஸ் சபை ... ஙஎஅ.

பருத்திக்கொட்டை: மனிதன் உணவு ... சகச.

பிரஹ்மஞான சங்கம், மதுரை. மிஸ்கிரைஸ்டி முதலியார்உபந்நியாசங்கள். ... உஙஅ.

பிரஹ்மஞான கிளைச்சங்கம், சிவகங்கை. ... உஎஎ.

பிராணயாமமும் ஜலதோஷமும். ... ங௦கூ.

பிரஹ்மஞான கிளைச்சங்கம் ... ... ஙஎசா.

பிரஹ்மஞான மடம். ... ... ஙஎஅ.

பிரஹ்மஞான கிளைச்சங்கம், கும்பகோணம். ... ஙஎகூ.

பெரியகுளம்பிரஹ்மஞான சங்கக்கூட்டம். அகூ, கூக, கூஉ, கூங, கூச.

பௌத்தமத விஷயம். ... ககூஅ.

மதுரை பிரஹ்மஞான கிளைச்சபை வெண்டாமரை நாள். ஙஉa.

மரத்தினுல் ரஸ்தா. ... ... கசாங.

மதுரை ஸ்ரீ மீனுக்ஷி வித்தியாசாலையின் வருஷோத்ஸவம். உச௦.

மஹிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேகம். ... ... சகச.

மின்மினிப்பூச்சியினின்று நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். ... ...ககூஎ.

மைசூர் கைம்பெண் மடம். ... கசாச.

வால் நக்ஷத்திரங்கள். ... ... கூச, கூரு.

வால் நக்ஷத்திரம். ... ... ஙஉC.

வித்யாதர்ம பரிபாலன ஸபை. ... ... ஙஉb.

வித்யாதர்மம்—சட்டியாபுரம் ஜமீன்தார். ... கசாச.

வியாதியை உண்டுபண்ணும் விஷக்கிருமிகளை அழிக்கும் ஓர் அற்புத விளக்கு. ... ககூசா.

ஸ்ரீ வெங்கட்டரமண வைத்தியசாலையும் ஆயுர்வேத பாடசாலையும். ... கருக.
வேதாந்த சாஸ்திரத்தில் பயின்ற ஒரு பெண்மணி. கசாரு.
வைதிக முறையான நாவா யாத்திரை. உருகூ.
ஜப்பான் தேசத்தில் யோக்கையாமா என்னும்பட்டணத்தில்திவ்யதிருஷ்டிபெற்ற 16வயதுள்ள ஒருசிறுவன் சகரு.
ஜனக்கணக்கு ... சகச.
ஜாம்கந்தியில் வித்தியாசாலை. உருசா.
ஹிந்து வானவன் ஆங்கிலப் பெண்ணை வேதக்கிரியையுடன் மணம்புரிந்தது. ... கூஅ.
சூரியன்: அதன் ஸ்தூல கவசங்கள் முதலியன—ப. நா. கஉரு.
சூரிய சம்பிரதாயம்: ஒரு பிரஹ்மாண்டம். வி. வெங்குஸ்வாமி அய்யர். உகூசா.
சூக்ஷ்ம சரீரத்தின்கண்ணுள்ள சக்கரங்கள். (C. W. L.) ப. நா. ருஉசா.
சைவம்—வைதிக—தெ. கிருஷ்ணஸ்வாமி. கசுச.
சைவம்—ஆகம—என். பிச்சைபிள்ளை. கஎ0.
தன்னைமறந்தால் தலைவனைக் காணலாம்—ப. நா. சாரு.
தர்ம சத்திரங்கள்—ப. நா. உ0ச.
தீயகுணமுள்ள குழந்தையை நல்ல குணமுள்ளவனாக மாற்று முறை—சிவராமசுப்பிரமணியன். உசரு.
தேவாலயம்—ப. நா. ரு.
நம் சரீரத்திலுள்ள சக்கரங்கள்—ப. நா. ... கஉக.
நாயைக்கண்டால் கல்லைக்காணோம் கல்லைக்கண்டால் நாயைக்காணோம். சிவராமசுப்பிரமணியன் உஎகூ.
நேரிசை ஆசிரியப்பா—சே. ரா. திம்மப்பையர். உஎரு.
பகவத்கீதையும் கருமயோகமும்—அ. ரங்கஸ்வாமிஅய்யர். எஅ, க0க, ககூ0.
பக்தி—கோபாலஸ்வாமி நாயுடு. கஎஅ.
பிரஹ்மஞான சபையின் பிரயோஜனம்—அ. ரங்கஸ்வாமி அய்யர். ருரு.
பிரஹ்மஞானசபையின் யந்திரம்—சிவராமசுப்பிரமணியன். ருகரு.
பிரஹ்மஞானசபை—ப. நா. ... ... ருருஉ.

பிரணவ உபாஸனை—நடேசஸ்வாமி ... ... ௩௬௫, ௪௦௬.

பிரஹ்மவித்யை—ப. நா. ௩௮௧.

'புனர் ஜன்மம் உண்டு' என்பதும் அதன் அவசியமும்—வி. வெங்குஸ்வாமி அய்யர். ... ௧௬௧, ௨௨௦.

புத்தக வரவு:—

அவதாரங்கள். அந்நிபெஸண்டு அம்மையார் உபந்நியாஸங்கள் தமிழ் மொழிபெயர்ப்பு. ௧௯௮ a.

ஆங்கில அரசியல் ... ... ... ... ௧௨௮

ஆரியஜன போதினி ... ... ... ... ௨௩௩.

ஸ்ரீ இராமாயண வினாவிடை ... ... ... ௧௨௮.

இந்து சாஸ்திராபிமானி ... ... ... ... ௨௩௩.

இரட்டைப்புலவர் சரிதம் ... ... ... ௨௭௫.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் அகராதி ... ௩௦௫.

கணிகாஞானி சம்வாதம் ... ... ... ௧௨௯.

கணக்கறிவிளக்கம் ... ... ... ... ௩௪௨.

கிரிஸெல்டா—ஒரு நாவல் ... ... ... ... ௩௪௨.

குலோத்துங்க சோழன் கோவை ... ... ... ௨௭௫.

குமாரஸம்பவம் ... ... ... ௩௪௨.

சர்வதர்சன சங்கிரகம்—தமிழ் மொழிபெயர்ப்பு ... ௯௯.

சத்தியவல்லி—ஒரு நாவல் ... ... ... ௨௩௩.

சந்திரசேகரன் ... ... ... ... ... ௩௪௨.

சமீவன மான்மியம் ... ... ... ... ௯௪ b.

சிவராத்திரி புராணம் மூலமும் அரும்பதவுரையும் ... ௨௩௨.

தசகாரிய விளக்கம் ... ... ... ... ௩௦௫.

திருக்குறள், பரிமேலழகருரையுடன் பாக்கெட் சைஸ். ௯௮.

திருக்குற்றாலத் தலபுராணம் ... ... ... ௨௭௫.

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் பிரதிஷ்டாபந்தனக்கணக்கு. ... ௩௦௫.

திருக்குறள் வசனம் ... ... ... ... ௯௪ b.

துவாதசோபநிஷத்—தமிழ் மொழிபெயர்ப்பு ... ௩௭௪.

பரத்தையார் கேண்மை விலக்கு ... ... ... ௩௭௪.

பாரதவினாவிடை ... ... ... ... ௩௪௨.
பிரபாவதி—ஒரு நாவல் ... ... ... ... ௩௪௨.
பிரச்னோத்ர ரத்நமாலை ... ... ... ... ௬௧௩.
மஹாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு. ... ௯௮.
வியாசப்பிரகாசிகை ... ... ... ... ௩௦௯.
வேதாந்த சூளாமணி ... ... ... ... ௩௪௨.
ஸத்குரு பாதங்கள் ... ... ... ... ௩௭௪.
ஸ்துதி மஞ்சரி ... ... ... ... ௨௩௨.
பூர்ணசந்திரோதயம் என்ற நாமகரணம்—பத்திராதிபர். ௧.
பூர்வஜந்மங்களைக் கண்டுபிடிக்கு முறை—ப. நா. ௭௧.
பெற்றோருடையவும், மக்களுடையவும் உத்திரவாதம்—ஆத்மநாதன். ... ௧௧௭.
மடாதிபதிகளுக்கோர் விஞ்ஞாபனம் ப. நா. ... ௪௫.
மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழ வேண்டுமென்பது—A. B. ௨௧௨, ௨௪௭, ௨௮௫, ௩௧௮ ப. நா. ௩௫௪, ௩௯௧
மகாலயபக்ஷமும் நவராத்திரியும்—பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் ... ௨௫௯, ௩௩௪.
மாது ஸ்ரீ அந்நிபெஸண்டம்மையார் பிரசங்கம்—ஸ்ரீராம். ௪௦.
மானுடசரீரம். இசக்கியாடும் பெருமாள் ... ௨௮௧.
விஷ வியாதிகளை விலக்குமுறை. பத்திராதிபர் ... ௯௦.
வீண் கவலைகொள்வதைத் தவிர். சிவராமசுப்பிரமணியன் ௧௯௯.
வைதிக சைவம். தெ. கிருஷ்ணசாமி ... ... ௧௧௪.
ஸமய தத்வம். ஸ்ரீநிவாசாச்சாரியார் ... ... ௧௫௩.
ஜீவன் ஒரு சரீரம்விட்டு மறுசரீரம் பெறும்வரையிலுள்ள மத்தியகாலம். சிவராமசுப்பிரமணியன். ௩௪௭.

பத்திராதிபர்.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
13 JUN 1910
MADRAS.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னைராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

**மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.**

தொகுதி 1. } 1910ஸு ஜூன்மீ
சாதாரணஸு ஆனிமீ { பகுதி 2.

## பிரஹ்மஞான சபையினால் நம் தேசத்தாருக்கு ஏற்படும் பிரயோஜனம்.

இவ்வுலகின்கண் ஒவ்வொரு காலத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள சமயம், சித்தாந்தம், சங்கம்முதலானவைகள் நீடித்து நிலை நிற்க வேண்டுமாகில் அவைகளை அனுசரித்து நடந்துவருகிற மனிதர்களின் நற்கொள்கைகள், நற்குணங்கள், சதாசாரங்கள் முதலானவை அந்தந்தக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு மாறுதல்களையும், அபிவிருத்தியையும் அடையவேண்டியது அவசியமாம். அவ்விதமான மாறுதலும், அபிவிருத்தியும் ஏற்படாத பக்ஷத்தில் அப்படிச் செய்யத்தவறின சமயம், சித்தாந்தம், சங்கம் முதலானவை மனிதர்களுக்கு அவசியமற்றவையாகவும், காலம் தவறி ஏற்பட்டனவ

யாகவும், குணத்தைக்கொடுக்காமல் தோஷத்தை உண்டுபண்ணத் தக்கவையாகவும், காலக்கிரமத்தில் பொய்த்தும் போய்விடுவன வாகும்.

அதனால் தற்காலத்தில் உலகமுழுவதும் பாவியிருக்கிற இந்தப் பிரஹ்மஞான சபையினால் நம்முடையதேசத்திற்கு என்ன பிரயோஜனம், இதுவரையில் சித்தித்திருக்கின்றது? இனிமேல் என்ன பிரயோஜனம் சித்திக்கக்கூடியது? அதுபோல் உலக முழுவதுக்கும் இதுவரை என்ன பிரயோஜனம் அச்சபையினால், சித்தித்திருக்கிறது? இனிமேல் சித்திக்கக்கூடியது என்ன? என்கிற இந்தக்கேள்விகளை விசாரித்து, விஷயங்களை நன்றாக ஆராய்ந்து பார்ப்போம்.

இவ்வுலகத்தின் பூர்வ சரித்திரங்களை நாம் விசாரிக்குங்கால், அச்சரித்திரங்கள் மூலமாய் நமக்கு வெளியாவது யாதெனின், சில காலங்களில் மனிதர்களுடைய வைதிக லௌகிக அபிவிருத்திக்கு அநுகுணமாய் அவர்களுடைய ஞானம், விவேகம், நாகரீகம் முதலானவை பிரகாசித்தும், அவர்கள் நலம் அமைந்த மாறுதல்கள் உண்டாகப் பெற்றும், சில காலங்களில் தர்மம் குன்றியும் அதர்மம் மேலிட்டும், தீய ஒழுக்கங்கள் விர்த்தியாகிக்கொண்டும், இவ்விதமாக கால நிகழ்ச்சி ஏற்படுகிறது. இதை அந்தந்தக் கால தர்மம் அல்லது யுகதர்மமென்று சொல்லுகிறோம். ஆனால் அந்தத் தர்மபேதங்கள் தெய்வ மனுஷ்ய முயற்சிகளால் ஏற்படுகின்றனவென்று அறிவோம். உலகத்தினுடைய அபிவிருத்திக்கேற்ப, மாறுதல்களை உண்டுபண்ணும் முயற்சிகளின் முறைகள் நான்கு விதமாகத் தோன்றுகின்றன.

1. சில காலங்களில் தர்மமானது அதிகமாகக்குறைந்துவிட, அதர்மமானது வரம்புமீறி அதிகரிக்குங் காலத்தில் அதனால் உலகத்துக்கு உண்டாகும் தீமையை நிவர்த்தி செய்ய, மனிதர் தேவர்களால் சாத்தியமில்லாமற் போகும். தர்மாதர்மங்களுடைய தாரதம்மியங்களின் விவஸ்தையை நேர்படுத்தவும், கால சக்கரம் தர்மத்தை அனுசரித்துச் சுழலும்படி செய்யவும், ஈசுவரன் அவதாரம் செய்கிறார். அவ்வவதார மகிமையால் உலகத்தில் அதர்மம் குறை

கிறது; தர்மம் விர்த்தியாகிறது. மனிதர்கள் நல்வழிப்படுகிறார்கள்; ஈசுவரனை அடையும் மார்க்கம் தெளிவாக மனிதர்களுக்கு உபதேசிக்கப்படுகிறது.

2. ஈசுவரனை வழிபடுதலையே முக்கிய நோக்கமாகக்கொண்ட அநேக மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தந்தக்காலங்களில் உள்ள மனிதர்களின் மனச்சக்திக்கு ஏற்பவும், அந்தந்தக்கால இயற்கைக்கு அமைந்தனவாகவும், உத்தம புருஷர்கள் உலகத்தில் அந்தந்தக் காலங்களில் அவதாரமாகி பற்பல மதங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். தற்காலத்தில் உலகத்தில், விசேஷமான தத்துவங்களை உடைத்தான சிரேஷ்டமான மதங்கள் அப்பேர்ப்பட்ட பெரியோர்களால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அம்மதங்களை அநுசரித்தே, நூதன நாகரீகங்களும் ஆசாரங்களும் லௌகிக சாஸ்திரங்கள் முதலானவைகளும் தழைத்தோங்கி வருகின்றன. ஹிந்து மதத்தைக் கைக்கொண்ட ஹிந்துக்களுடைய நாகரீகங்களும் சாஸ்திரங்களும் இப்பரதகண்டத்தில் விளங்குகின்றன. அதே மாதிரியாக பௌத்த மதத்தைக் கைக்கொண்டவர்களின் நாகரீகமும் சாஸ்திரப் பயிற்சியும் இந்தியாவுக்குப் புறம்பாகவுள்ள பர்மா, ஜப்பான், சீனு, திப்பெத், முதலான தேசங்களில் பரவி விருத்தியடைகின்றன. தவிரவும் இந்தியாவிலேயோ முன்காலத்தில் பௌத்தர்களுடைய ராஜாங்கமும் செல்வாக்கும் இத்தேசமுழுமையும் பரவியும் அவைகளின் சின்னங்கள் இந்தியாவில் அநேக இடங்களில் தற்காலங்களிலும் அழியாதும் நிற்கின்றன. ஜயினரின் சமயமும் அவர்களின் கல்விப்பயிற்சியும் தமிழ் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளின், அச்சமயிகளான பலவித்வான்களால் செய்யப்பெற்ற இலக்கண இலக்கியங்கள் மூலமாய் போதுமான சாக்ஷியாகக் காணப்படுகின்றன. இம்மாதிரியாகவே இதர மதங்களிலும் அவைகளின் மூலமாய் வெளியாகி வந்திருக்கின்ற வித்தைகளும் சாஸ்திரங்களும் பல உண்டு. ஆகையினால் உத்தம புருஷர்களாகிய சமயஸ்தாபனுசாரியர்களுடைய முயற்சிகளும் உலகத்தினுடைய வைதீக லௌகீக அபிவிர்த்திக்குக் காரணமாக இருக்கின்றன.

3. இதுவுமல்லாமல் ஜனசமூகத்தினுடைய விவேகத்தினுலும் முயற்சியினுலும் ஞானம் அதிகரித்து மனிதர்களுக்குள் நாகரீகம் வி

த்தியாகின்றது. சென்ற நூற்றூண்டில் மனிதன் மனிதனை அடிமையாகக்கொண்டு விக்கிரயம் செய்யும் வழக்கம் நின்றுபோயிற்று. ஜனங்களுடைய நன்மைக்காக அவர்களுடைய அபிப்பிராயங்களை, பார்லிமேண்டு முதலிய சபையார் தெரிந்துகொண்டு நடக்கும் அரசாக்ஷியுள்ள தேசங்கள் சில இருக்கின்றன. ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய காலங்களில் விசாலமான வித்யாசாலைகள், வைத்திய சாலைகள், கலாசாலைகள் முதலியவை ஜனங்களால் ஜாஸ்தியாக ஆதரிக்கப்பட்டுவருகின்றன. இவ்விதமாக ஜனங்களின் ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் பொதுவான ஞான அபிவிர்த்தியும் சௌக்கியமும், மேன்மையும் ஏற்படுவனவாகும். இம்முறையில் ஈசுவர சங்கல்பமானது ஜனங்கள் தங்கள் முயற்சினாலேயே தங்களை உயர்த்தியும், நலப்படுத்தியும் கொள்ளட்டுமென்பதாக இருக்கும் என்று தோன்றுகிறது.

4. ஈசுவரன் அவதரிக்காமலும், சமயஸ்தாபனாசாரியர்கள் தோன்றாமலும், பெரும்பான்மையான் பொது ஜனக்கூடத்தினால் நலம் தரும் மேலான முயற்சிகள் உண்டாகாமலுமிருக்கும் காலத்தில், மனிதர்களுடைய ஞானாபிவிர்த்தியும், அதை ஆதாரமாகக் கொண்ட மத ஆராய்ச்சியும், அதன்மேல் சார்ந்திருக்கிற சாஸ்திரப் பயிற்சியும், இந்தப் பிரஹ்மஞான சபையைப்போன்ற சபைகளினால் சில சில காலங்களில் ஏற்படக்கூடியதாக நிகழும். இந்தச் சபையானது ரிஷிகளுடைய அநுக்கிரகத்தைப்பெற்றதாய் அவர்களுடைய நோக்கங்களை வெளியிடத்தக்க கருவியாகி லோகத்தின் இகபரஹிதத்தையே பிரதானமான காரியமாகக் கைக்கொண்டு நிறைவேற்ற முயலுகின்றது.

ஹிந்துமதம், ஸநாதநமதமென்பதாயும், அதன் ஸ்தாபனாசாரியார் என்று நாம் ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாததாகவுமிருந்தபோதிலும், பெரும்பாலும் அதன் தர்ம முறைகள் ஒழுக்க முறைகள் மனு என்ற மகாபுருஷனால் ஸ்தாபிக்கப்பட்டவையாகச் சொல்லப்பெறும். ஆரியர்களுக்கு, ஸநாதநதர்மம் என்ற மதத்தில், நான்கு வருணாச்சிரமதர்மங்களுடன் பொருந்திய வரிசைக்கிரமமுள்ள ஒரு ஜன சேர்க்கையும், ஸ்தூல சரீரமாகிய அந்நமய கோச

REGISTRAR OF BOOKS REGISTERED 13 JUN 1913 MADRAS

முதற்கொண்டு ஆனந்தமயகோசவரையிலுள்ள சரீரங்களைச் சுத்தி பண்ணிப் பயிற்சி செய்யும் முறைகளாகிய கர்ம, பக்தி, ஞானயோக மார்க்கங்களும், ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்வுலகமானது சூக்ஷ்மமான புவர், சுவர் முதலிய உலகங்களோடு சம்பந்தப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றும், ஒரேகாலத்தில் பூ, புவர் முதலிய சப்த உலகங்களிலும் அந்தந்த உலகங்களுக்கு நேர்மையான சரீரங்களோடுஜீவனானவன் சம்பந்திக்கிறபடியால், ஒவ்வொருஉலகத்திலும் அவனுடைய சக்திகளைச்சரியாக உபயோகப்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேணுமென்றும், கடைமுறையில் பல நாமங்களால் குறிப்பிடப்படும், நிர்வாணம், பரமபதம், மோக்ஷம், முக்தி, வீடென்ற உயர்வற உயர்நலம் அமைந்த புருஷார்த்தத்தை அடையும் லக்ஷியத்தை முன்வைத்து, இவ்வுலகின் எல்லா விவகாரங்களையும் எல்லா வியாபாரங்களையும் நடத்தவேண்டுமென்றும், இந்து மதத்தின் முக்கியமான சித்தாந்தமாக இருக்கின்றன. இப்படிப் பலவாறான பிறிவுகளோடும் பலவித நெறிகள் உள்ளதான அடர்ந்த ஆரண்யமான ஹிந்துமதத்தில் ஒவ்வொருவனும் அவனவனுடைய விகாசமுறை நிலைக்கும் அறிவின் பயிற்சிக்கும் ஏற்ப, ஒரு வழிமுறையைத் தெரிந்துகொண்டு அதில் பயின்று நடைபெற வேண்டும். பலவாறாக அமைக்கப்பட்டு வெவ்வேறு குணங்களும், வெவ்வேறு இயற்கையுமுள்ள மனிதர்கள் உஜ்ஜீவிக்கத்தக்க வெவ்வேறு மார்க்கங்களை இந்த ஸநாதந தர்மமானது உபதேசிக்கின்றது. இப்படிப் பலவாறாக வழிகள் ஏற்பட்டிருப்பதில், இவ்வழிகளில் ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தங்களையும், இவ்வழிகளில்வெளிப்படையாக ஒன்றுக்கொன்று பரஸ்பரம் வித்தியாசங்கள் இருந்தபோதிலும், உண்மையில் அவைகள் ஸமரசப்படுத்தக் கூடியவைகளாம். இந்த உண்மை தெரியாத சிலர் தங்களுக்கு இந்த ஸநாதந தர்மம் என்ற மகாரண்ணியத்தில் யுக்தமாகத் தோன்றுகிற ஒரு மார்க்கத்தை மட்டும் கடைப்பிடியாகக்கொண்டு, மற்ற மார்க்கங்களை அவமதித்தும் அவைகளின் மேல் வெறுப்புக் கொள்ளுகின்றார்கள். இதை நம்தேசத்தில் சாதாரணமாகப்பார்க்கின்றோம். இதனால்தான் ஹிந்துமதத்தில் பல உட்பிரிவுகளுக்குள் அதாவது, சைவ, வைஷ்ணவ, சாக்த, ஸௌர, காணபத்திய முதலானவைகளில் பரஸ்பரம் வைஷம்மியம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் பிரஹ்மஞான சபையின் முக்கியமான தர்மம் என்னவெனில், ஹிந்து மதத்தின் ஒவ்வொரு பிரிவின் தத்துவார்த்தங்களை விளக்கி, அவைகள் ஒன்றோடொன்று நேர்மையாக ஒத்திருப்பதை எடுத்துக்காட்டி, அவைகளுடைய சரியான தாத்பரியமானது, பகவான் பகவத்கீதை 4-வது அத்தியாயம் 2வது சுலோகத்தில் சொல்லியபடி, மகத்தானகாலபேதத்தால் நஷ்டமடைந்திருப்பதாக உணர்ந்து அந்த நஷ்டத்தை விலக்கி, அந்தந்தப் பிரிவுகளின் உண்மையை விசாரித்து, அவ்விதம் பலவாறுகப்பிரிந்திருக்கிற மார்க்கங்களெல்லாம் ஏகமாகி ஸநாதநதர்மம் என்ற ஒரே ரூபத்தைத்தரித்திருப்பதாகக் காட்டுவதேயாம். தவிரவும், இந்தப் பிரஹ்மஞான சபையினுடைய முயற்சியினுல் நம்முடைய தேசத்திற்கு ஏற்படக்கூடிய மற்றொரு பிரயோஜனம் உண்டு. மேற்றிசையாரின் நாகரீகத்தினுல் நாம் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயமானது என்னவென்றால், நம்முடையஸநாதநதர்மத்தின் தத்துவங்களை பலர்களுக்கு எந்தவிதங்களால் பரவச்செய்யலாமென்பதையும், எந்தெந்த லௌகீக விர்த்திகளில் அவைகளைப்பிரவேசிக்கும்படி செய்யலாமென்பதையும், லௌகீக வித்தைகளின் தேர்ச்சியானது ஆத்மஞானத்திற்குப்பாதகமில்லாமல் இருக்கக்கூடுமென்பதையும், இத்தேசத்தில் பூர்வமாயுள்ள ஆர்யமதத்திலுள்ள பரவித்தையான ஞானமும், மேற்றிசையார்கள்தேர்ச்சியடைந்திருக்கிற அபரவித்தையான புலனறிவு சாஸ்திரங்களின் பயிர்ச்சியும், ஒன்றுசேர, இரண்டின் நன்மைகளையும் ஒருவன் அடையும் பக்ஷத்தில், மேன்மேலும் இகபர சம்பத்து விர்த்தி அடையக்கூடுமென்பதையுங் காண்பிக்கிறது. இல்லறத்தை விட்டுத்துறவறத்தைக்கைக்கொண்டு தவவேடம் பூண்டு மனிதர்களில்லாதகாடுகளில் சென்று தபசுசெய்கிறது மட்டும்தான் உத்தமமான வழி அன்று. தற்காலத்திலிருப்பதுபோல் விரிவாயும் பலவகைக்கிளைகளோடு கூடியதாயுமுள்ள மனுஷப்பிரயத்தனங்கள் முற்காலத்தில் ஏற்படவில்லை. இக்காலத்தில்முனிசிபாலிட்டிகளென்ன, வியாபாரக் கூட்டங்கள் என்ன, பலவிதமானயந்திரசாலைகளென்ன, கல்விச்சாலைகளென்ன, அளவிறந்த வரும்படிகளையுடைய தேவாலயம் முதலிய தர்மங்கள் என்ன இவைகள் முற்காலத்தில் ஏற்படவில்லை. அவைகளைமேற்பார்க்கிறதற்கு ஐரோப்பியர்களுடைய லௌகீகமானசாஸ்

திரங்களிலும் கலைகளிலும் தேர்ச்சியும், அவைகளை நடத்தும் முறைகளில்பழக்கமும் சக்தியும், எந்தவிதிகளை ஏற்படுத்தினலும் அவைகளையநுசரிப்பதற்குத்தகுதியான ஊக்கமும் மனேதயிரியமும் சிலமும், மேன்மேலும் இத்தேசத்தில் ஏற்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. இவைகளை நேர்மையாகவும் சரியாகவும் நடத்தி வருவோமானல், இதனல் ஜனசமூகத்திற்கு விளையும் பயன் வெகு விசாலமானது. இவ்விஷயங்களில் நாம் பிரவேசித்து சத்தியமாக இவைகளைக்கொண்டுசெலுத்துவோமானல், இவைகளும் உத்தமமான மார்க்கமே. ஈசுவரகர்மத்தைச்செய்வதற்கு அகங்காரம் மமகாரத்தைத்தவிர்த்துமாத்திரம் நாம் ஒழுகவேண்டும். இவ்விஷயத்தில் பிரஹ்மஞான சபையானது நம்முடைய உத்தரவாதத்தை வற்புறுத்திக்காட்டுகின்றது. இச்சபையின் தற்கால பிரயோஜனத்தை சுருக்கமாகச்சொல்லுமிடத்து, ஸநாதந தர்மத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கொள்கைகளையும் அவைகளின் தத்து வார்த்தங்களையும் இதர தேசத்தார்களால் விர்த்திசெய்யப்பட்டிருக்கிற லௌகிக சாஸ்திரங்களையும் கலைகளையும் பலர் அறிந்துகொண்டு, ஜனஸமூகத்தில் அவைகளைப் பரவச்செய்து, அவைகள் மூலமாகத் தெய்வ சம்பத்து நம்மவர்களுக்குள் மேன்மேலும் விர்த்தியடையும்படியாக, நாம் முயற்சிக்க வேண்டிய வழிகளை நமக்கு உபதேசித்தலேயாம்.

அ. ரங்கசுவாமி அய்யர்.

# பிரஹ்ம ஞான சங்கத்தில் சிலரை அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டகாலத்தில், மாது ஸ்ரீ அந்நிபெஸன்ட் அம்மையார் செய்த பிரசங்கம்.

[குறிப்பு. சகோதரர் கோஷ்டியாகிய இச்சங்கத்தில் சேரவிரும் பியவர்களை அங்கீகரித்து ஏற்றகாலத்து, அவர்களை அகமகிழ்ந்து உப சரித்து நல் வரவு கொண்டாடி சிற்சில போதனமொழிகளையும் சொல்லும் வழக்கம் ஏனைய தேசங்களில் நீண்டகாலமாக நிகழ்ந்து வந்தது. அந்தச் சம்பிரதாயம் இந்நாட்டில் என்றும் உண்டு. இவ்வருஷம் நமது சங்கத்தலைவியார் செய்த பிரசங்கம் இதனடியில் பிரசித்தம் செய்யப்பெற்றிருக்கிறது:—]

சகோதரர்களே:—

1. நமது கோஷ்டியில் அன்பர்கள் நூதனமாகச் சேரும்பொழுது, அவர்கள் நம் திருக்கூட்டத்திற் சேர்வதற்கு அத்தாக்ஷியாகவும், நம்மத்தியில் அவர்கள் வந்து சேர்ந்த நல் வரவுக் கொண்டாட்டத்திற்காகவும், நமது சங்கத்தின் அங்கத்தினர்களில் சிலரேனும் ஒருங்கு சேரவேண்டுமென்பது நமக்கு உள்ள ஓர் சம்பிரதாயம்; அது மிகுந்த பிரயோஜனமுடையது என்பது என் அபிப்பிராயம்.

2. இச்சங்கத்தின் நோக்கங்கள் இன்னின்னவை என்று முன்னமே நீங்கள் அறிந்து இருப்பீர்கள்; ஆகையால் நான் இப்பொழுது அவைகளை விவரிக்கவேண்டிய அவசியம் இல்லை; அப்படியிருந்தும் ஒரு விஷயத்தைப் பற்றிமட்டும் உங்களுக்கு நினைப்பூட்டுவது தகுதியென எனக்குத் தோன்றுகிறது. மனுஷியர்கள் எல்லாம் உடன்பிறந்தவர்கள் என்னும் சகோதரபாவத்தை உண்டுபண்ணுவது, இச்சங்கந்தான் என்று நாங்கள் உரிமைகொண்டாடவில்லை. சர்வஜனங்களும் சகோதரர்கள் என்பது இயற்கையில் ஏற்பட்ட உண்மை. நித்யனாகிய பரமாத்மாவினின்றே, இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள சகல ஜீவராசிகளும் உயிர் பெற்று இருக்கின்றன என்பது யாரும் தெரிந்த விஷயம். அச்சகோதரத்தன்மையை நம்மால் உண்டாக்கவும் ஆகாது, அழிக்கவும் ஏலாது. ஆயினும் அத்தத்துவத்தை நாமெல்லோரும் உற்று உணர்தல் கூடும். அவ்வகை உணர்ச்சி நம்மிடத்து உண்டானால், மற்றவர்களிடத்தும் அது பரவுதற்கு ஹேதுவாய் இருக்கும். பிராத்ருபாவத்தை உற்று உணரச்

செய்ய வல்ல சக்திகள் பல ஒழுங்காக்கப்பட்டு, அச்சக்திகள் வெளிக்கிளம்பி மற்ற இடங்களில் பரவுகிறதற்கு, அனுகூலமான நிலைக்களம் ஒன்றாக நமது சங்கம் நிற்கின்றது. இவ்வகையான ஞானம் பிரஹ்ம ஞான சங்கத்தினின்று பரவுகின்றது; எப்படியெனில் இச்சங்கம் பலபேர்களைக் கூட்டி ஒருங்குசேர்க்கின்றது. அப்படிச் சேருபவர்கள் எல்லாரும், தம்மை ஐக்கியமுறச்செய்கின்ற பந்தம் எதுவென அப்போது உணர்கின்றார்கள்.

3. இச்சங்கத்தில் சேருவதால் சில கடமைகளையும் உத்தரவாதங்களையும் நீங்கள் வகித்துக்கொள்ளுகின்றீர்கள் என்றும், நீங்கள் எல்லோரும் அடையக்கூடிய பெரும்பதவி ஒன்று உங்கள் முன்னே தோன்றி வருவதைக்காண்பீர்கள் என்றும் உங்களுக்கு ஞாபகப்படுத்துவது என் கடமை. இனி, நீங்கள் செய்யவேண்டிய முதலாவது கடமை, உங்கள் மதவிஷயமாகத்தான் ஏற்படுகின்றது. பெரும்பாலும் ஜனங்கள் தம் தம் மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலேசாய் உடன்படுகிறார்கள், கட்டுப்படுகின்றார்கள்; ஏனெனில் சாதாரணமாய் மனிதர்கள் எவரும் எந்தமதம் தங்களுக்கு மிகப்பொருத்தமானதோ, எதில் தாம் விகாசம் பெறல் கூடுமோ, அதில் தான் ஜனிக்கின்றனர்; ஆனதுபற்றி இந்த கோஷ்டியில் நீங்கள் பெறநேரும் ஞான ஒளியைக்கொண்டு, உங்களுடைய மதத்தை உயிர்ப்பிக்கவும், அதனிடத்துள்ள மங்கலான பாகங்களை பிரகாசிப்பிக்கவும், அதன் போதனைகளை பிறருக்கு விவரிக்கவும் செய்வீர்களாகில், அஃது இச்சங்கத்தின் அங்கத்தினர்களாய் நீங்கள் செய்யவேண்டிய கடமைகளில் முக்கியமானதாகும். குறைந்தபடிப்பாளிகளுக்கு, அவர்மதமே அவர்களை ஆற்றித்தேற்றி உயர்வான நோக்கங்களை விரும்பிப்பற்றும்படி செய்யப்போதுமான சக்தியுடையதாய் இருக்கின்றது. ஆயினும் எங்களிடமிருந்து நீங்கள் கற்பதை மிகுந்தபடிப்பாளிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளுவதால், உங்கள் மதத்தை உயர்த்தி மேன்மைப்படுத்தி விசாலிப்பிக்கக்கூடும். சகோதர பாவத்தை நீங்கள் நன்றாய் உற்று உணர்வதால் ஆவது என்னவென்றால், அன்னியமதஸ்தர்களிடத்து சண்டையிட்டு வாதுசெய்யாது, நீங்கள் எல்லோரும் அவர்களைத்தழுவி நிற்கும் பிராதிருபாவக்கொள்கையின்படி நடந்து ஒரு

வீர்கள். உங்களுடைய மதத்தை பிறர் இகழாது மதிக்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கும் வண்ணம், நீங்களும் அன்னியமதங்களை அவமதியாது கண்ணியப்படுத்துவீர்கள். ஏனையமதங்கள் உங்களுக்குப் புகட்டக்கூடியதை நீங்கள் மனம் இணங்குவதுடன், உங்கள் மதத்தில் விசேஷமானது ஏதாயினும் ஒன்று இருப்பின், அதை அம்மதங்களுக்கு உவந்து உதவுவீர்கள். இவ்விதம் செய்தால், பொதுவாக இச்சங்கம் வேறுபாடுகளை விலக்கி அமைதியை உண்டாக்குவது போல, நீங்களும் எவ்விடம் போனாலும் அமைதி உண்டாக்குபவர்களாக விளங்குவீர்கள்.

4. பிரஹ்மஞான மந்திரம் ஒன்றில் நீங்கள் சேர்ந்தவர்களாயின், அடுத்தபடி நீங்கள் செய்யவேண்டிய கடமை அதின் பொருட்டே ஏற்படுகின்றது. நீங்கள் சேர்ந்திருக்கும் சபை சம்பந்தமான விஷயங்களை உங்களது வாழ்க்கையின் ஓர் அம்சமாக்கப்பார்ப்பீர்களாக; அதற்கு எதைக்கொணர்ந்து சேர்த்தல் ஆகும் என்பதை சதா சிந்திப்பீர்களாக; ஏதேனும் ஓர் வித்தையை அப்யஸித்து நன்றாய் ஆராய்ச்சி செய்திருப்பீர்களாயின், அவ்வித்தையை உங்கள் சபையைச்சேர்ந்த வர்களுக்குத் தெரிவிப்பீர்களாக; அவ்வாறுசெய்யின் சங்கத்தின் அங்கத்தினர் எல்லோரும் விசேஷ ஆராய்ச்சிக்காரருடைய படிப்பின் பிரயோஜனத்தைப் பெறநேரும். உதகரித்துக் காட்டுவோம். வைத்தியசாஸ்திரபண்டிதர் ஒருவர் சூட்சும சம்பந்தமான வியாதிக்கூறுமென்று சந்தேகாஸ்பதமான அநுபவங்களை விளக்கம் செய்வதில், தமது சாஸ்திரப்பிரஞ்ஞையை உபயோகிக்கலாம் அல்லவா? ஆகையால் கிளைச்சங்கம் கூடும்போதெல்லாம் நீங்கள் அச்சபைக்கு தவறாது போவீராக; கேவலம் உங்களுக்கு வரும் பிரயோஜனத்தை உத்தேசித்தன்று. நீங்கள் அதற்கு உதவிபுரிகிறதற்காகத்தான் என்று எண்ணுக.

5. பிரஹ்மஞான சங்கத்தின் அங்கத்தினர்களில் சிரத்தையுள்ளவர்கள் சிலர்சேர்ந்த சபையின் மூலமாய்,மகான்கள் தம்நற் சக்தியை பக்கங்களில் பரவச்செய்யக்கூடும், என்பதை உங்கள் ஞாபகத்தில் இருத்துங்கள். கிளைச்சங்கங்கள் மகான்களின் மகிமை வெளிப்படுவதற்குத் துணைக்கருவிகளாய் நிற்கின்றன; அவைகளினின்றும்

அம்மகான்களின் நன்னெறி ஒழுக்கம் நாநுபக்கங்களிலும் பரவும். மேலும், அச்சபைகளினின்று அனேக மானஸீக பாவங்களான உருவங்கள் வெளிவந்து தம்மைச்சூழ்ந்து கிடக்கும் மானஸீக ஆகாசத்தில் பரந்து உலாவுகின்றன.

அவ்வகை உருவங்களை ஏற்கவல்ல மநோபாவமுள்ளவர்களால் அவைகிரகிக்கப்படுகின்றன. இவ்வுலகம் எங்கும் பரவியிருக்கும் என் வேலையை யான் செய்துகொண்டு வருகையில், என் அநுபோகம் என்னவென்றால், எவ்விடங்களில் கிளைச்சங்கங்கள் கிரமமாய்க்கூடி ஒழுங்காய் நடந்து வருகின்றனவோ, அவ்விடங்களில் உள்ளவர்கள் யான் சொல்லும் ஞானவிஷயங்களை ஏற்கவல்லமனப் ப்பிறிசியுடையவர்களாய் இருக்கின்றார்கள்.

6. உங்களுக்கு அபிமுகமாக விரிந்து தோன்றிவரும் சித்திக்கக்கூடிய பெரும் பதவி ஒன்றுஉண்டு. பிரஹ்மஞானம் என்பது இந்தஸ்தூல் பிரபஞ்சத்தின்கண்காணப்படும்இச்சங்கமாத்திரமன்று. மனுஷாள் எல்லோரையும் ரக்ஷித்து கடாக்ஷித்து வருபவர்களாகிய பரமாசாரியர்கள் எந்த மார்க்கத்தில் சென்றுதங்கி இருக்கின்றனரோ, அத்தகைய அரியகுறுகிய பிராசீன மார்க்கத்திற்குப் போகவிடும் கதவுஒன்றையும் இச்சங்கம் திறந்து விடுகின்றது. இச்சங்கத்தில் மூன்று வகுப்புக்கள் உண்டு. அவைகளில் முதல்வகுப்பில் சேர்ந்தவர்கள் மகாத்மாக்களேயாம். அடுத்த வகுப்பில் உள்ளவர்கள் பல படிகளிலுள்ள அந்தரங்க வித்தியார்த்திகள்; அவர்களில் முதல் தரத்தவர்கள் மகாத்மாக்களை பிரத்தியக்ஷமாய் கண்டறிந்தவர்கள். சங்கத்தின் வெளிப்புறத்தவர்கள் மூன்றாம் வகுப்பினர். இவ்வெளிவகுப்பில் சேர்ந்து, இரண்டு வருஷம் ஆகி, நீங்கள்சிரத்தையுள்ளவர்கள் என்றும், பிரயாஸிகள் என்றும், பரித்யாகிகள்என்றும் தெரியவருமானால், இரண்டாம் வகுப்பின் முதற்படியில் நீங்கள் இஷ்டப்படும் பக்ஷத்தில் சேரலாம். அதிற்சேரவேண்டுமென்று ஒருவரும் உங்களை அழைக்கமாட்டார்கள். கட்டாயப்படுத்தவும் மாட்டார்கள். அவ்வாறு அழைத்தலும் கூடாது, என்று உங்களுக்கு எச்சரிக்கிறேன்; சங்கத்தினுட் புகவேண்டுமென்னும் அவா உங்களினின்றே வரவேண்டும். எங்கள் கூட்டத்தில் சேரவேண்டும் என்

னும் ஆசை உங்கள் உள்ளத்தினின்று உதயமாகும் மனஎழுச்சியால் ஏற்படவேண்டும். உட்புகின், நம்முன்னர் அவ்வழிவிரிந்து தோன்றும்; எங்களிற் சிலர் அவ்வழி மிதித்துச்சென்று இருக்கின்றனர்; அது மகாத் மாக்களிடத்துக்கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதையும் அறிந்திருக்கின்றனர்; அவ்வாறுயினும் நீங்களே அவ்வழி ஏறிச்செல்லல்வேண்டும்.

7. எனது பிரியசகோதரர்களே:— நீங்கள் இச்சங்கத்துட் சேர்ந்ததை நாங்கள் நல்வரவாகக் கொண்டாடுங்கால், எனக்கும் ஏனையோர்க்கும் இச்சங்கம் மேலான வாழ்க்கைக்கு வழி காட்டிய வண்ணம் உங்கட்கும் நன்னெறி காட்டிச்செம்மைப்படுத்தும் என்றுநம்புகின்றேன். "சகோதரர்களே—வருக, வருக" என ஆதரவுடன் அரவணைத்து அழைத்து இன்று உங்களை எதிர்கொண்டு தழுவிய இச்சங்கம் உங்களது நல்வரவால் மேன்மையடைந்து என்றும் குதூகலிக்கும்படி, அவ்வளவு உயர்தர உத்தம அங்கத்தினர்களாய் நீங்கள் எல்லோரும் ஆவீர்களாக!

"ஸ்ரீராம்"

ஓம்தத்சத்.

[From Adyar Bulletin March 1910 Page 69-]

---

## நன்மொழி.

4. பிறர்க்குச்செய்யும் செயல் நம்முடைய தகைமையின் அளவைக்காட்டும். பிறர்க்குப்படும் துன்பம் நம்முடைய அன்பின் அளவைக் காட்டும்.

5. உலகசம்பத்து எவ்வளவு இருந்தாலும், தீயவன் எப்போதும் துக்கமுள்ளவன். எவ்விதக்குறை இருப்பினும், எவ்விதச்சங்கடங்களுக் குள்ளாயினும், எவ்வித கஷ்டம்வரினும், நல்லவன் வருந்தான், கெடான், கடைமுறையில் நன்மை பெறுவான்.

6. உலக அனுபவத்தில் நாம் அறிந்த உண்மை இதுவாம் பிறர் வருந்த, அதை நாம் சகியாமல், நம்மனம் உருகி, அவ்வருத்தத்தை நீக்க முயலுவதே நம் கடமை.

# மடாதிபதிகளுக்கோர் விஞ்ஞாபனம்.

:o:

அந்தந்த சமயத்தாருக்கு ஞான குருபீடங்களாக விளங்கும் மடாதிபதிகளே!

(1) *ஆதியில் ஒவ்வொருமடத்திலும்இரண்டுவிதமான ஞான சம்பிரதாய முறைகள் இருந்தனவாகத் தெரியவருகிறது. ஒன்று பஹிரங்கமானமுறை; அதில் எல்லா சீஷர்களும் பயிலலாம். மற்றொன்று அந்தரங்கமான முறை; அது குப்தமானது, அதில் சிலதீக்ஷாக் கிரமங்கள், ரகஸ்ய உபதேசங்கள் ஏற்பட்டிருந்தன. இப்போதுபிந்தியமுறை முற்றும் விட்டுப்போனதாகக் காணப்படுகிறது. அதுதான் மடத்தின் பிராணகலையுள்ள நிலையாம். அதை திரும்ப மடாதிபதிகள் கைக்கொள்ள வேண்டும். அந்தமுறை திரும்பவும் நிகழ வேண்டுமானால் மடங்கள் பரிசுத்தம் பெறவேண்டும். தேவதா அனுக்கிரஹம் பெறவேண்டும். இது முக்கியமாம்.

(2) நம் தேசத்தில் உத்தேசம் 20 கோடி ஹிந்துக்கள் இருக்கின்றார்கள். அதில் சென்னை ராஜதானியில் 3 கோடி பெயர்கள் இருக்கின்றார்கள். இவர்கள்பெரும்பான்மையாரின், ஞானம், ஆசாரம் முதலியவைகள் சம்பந்தப்பட்ட மட்டில், உங்களின் ஆதீனத்திற்குட்பட்டிருக்கின்றார்கள். அவர்களை நல்வழிப்படுத்தலும், ஞான சம்பத்துப் பெறும்படி செய்தலும் அந்தந்த மடத்தைச் சார்ந்தவர்கள் அந்தந்த மடத்தின் சித்தாந்தமாயுள்ள சமயமுறை சம்பிரதாய முறைகளை அனுஷ்டிக்கும்படி செய்வித்தலும், அந்தந்த மடாதிபதிகளைப்பொறுத்த கடமையாம்.

(3) உங்கள் சீஷர்களான ஜனங்கள் சீலம் நல்லொழுக்கம் முதலியவைகளில் வழுவாது நடைபெறவேண்டியே, அவர்களை பாதுகாத்தற் பொருட்டே, உங்களுடைய மடாலயங்கள் உங்களுடைய பூர்வ ஆசாரியர்களால் ஸ்தாபிக்கப்பெற்று இருக்கின்றன. ஜனங்கள் ஞானமின்மையும் ஆசாரக்குறைவும் உடையராக இருப்பார்களாகில், அந்த ஸ்திதிக்கு மடாதிபதிகளும் உத்தரவாதிகள் ஆவார்கள். மனைவியின் குற்றம் கணவனையும், புதல்வனின் குற்றம் தகப்பனை

---

* இது பாளயங்கோட்டையில் சைவ சமய அபிவிர்த்தி சபையின் சென்றமீ 30௳ வாசிக்கப்பெற்ற விரிவான உபந்நியாசத்தின் பிந்தியபாகம்.

யும், மாணவரின் குற்றம் அண்ணாவியையும், ஜனங்களின் குற்றம் மடாதிபதிகளையும் பொறுத்தன.

(4) இப்போது மடங்களும் மடாதிபதிகளும் நல்ல ஸ்திதியில் இல்லை என்று நீங்களே நன்றாய் அறிவீர்கள். கல்வி, கேள்வி, வரவர, மலினமாகிக்கொண்டு வருகிறது. தர்ம முறையும் நீதி முறையும் வரவரக் குன்றி வருகின்றன. சதாசாரமும் சத்சங்கமும் வரவரப்போய்த்துப்போகிக்கொண்டிருக்கின்றன. வித்வத்சபை, சாஸ்திர விசாரணை, ஞானப்பயிற்சி, தபஸ் இவை போலிவழியில் நிகழ்கின்றன. இன்னும் மடங்களினுடையவும் மடாதிபதிகளுடையவும், குறைகளையும் நேர்மையின்மையையும் சொல்லப்புகில் பெருகும். அதனால் கேட்போர் மனம் நைந்து உருகும். பிரகிருத ஸ்திதியை தாங்கள் ஒவ்வொருவரும் ஏகாந்தம் பெற்று தனியாய் அவர் அவர் மனத்தின்கண் சிந்தனை கொள்ளுவீர்களாகில், உண்மையில் நீங்கள் அனுதாபப்படுவீர்கள்.

(5) மண், பெண், பொன் என்ற உலக ஆசைகளை முற்றும் துறந்தவர்களாக உங்கள் முன்னோர்கள் இருந்தமையால், அவர்களுடைய சுயநயம் பாராட்டாமல் பொது நயம் பாராட்டுவார்கள் எனவும், கர்மயோகிகளாக நடு நிலைமை தவறாமல் நடை பெறுவார்களெனவும் நம்பி, ஜனங்கள் ஏராளமான வருவாய்கள் உண்டாகும் வண்ணம், மானிப நிலங்கள், திரவியங்கள் மடங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போதும் கொடுக்கின்றார்கள்.

(6) ஷை திரவியங்கள் மடத்தின் நியாயமான செலவுகளுக்கும், (அதாவது ஆராதனைகள், குருபூஜை, வித்தியார்த்திகள் உணவு, முதலியன) மடாலயங்களின் மராமத்துக்கும்; எஞ்சினவை பாடசாலைகள் முதலிய தர்மத்திற்கு மென்றும் நீங்கள் அறிவீர்கள். வேடிக்கைகள், விளையாட்டுகள், ஆடம்பரமான மற்ற விஷயங்களுக்கு, அத்திரவியங்களை விநியோகிக்கக்கூடாது என்பதும், தங்களுடைய பூர்வ ஆச்சிரமத்திலுள்ள பந்துக்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் அவர்கள் குடும்பக் கிருத்தியங்களுக்கும் அத்திரவியங்கள் உபயோகிக்கக்கூடாது என்பதும், நீங்கள் அறியவேண்டும்.

(7) மேற்படி திரவியங்களும் மற்ற வருவாய்களும், உங்களிடத்தில் மடாலய தர்ம பரிபாலனத்திற்காகவும், அந்தந்த மடத்திற்குரிய சமய முறையும் ஞானமும், ஜனங்களுக்குள் அபிவிர்த்தியாகிப் பரவச் செய்வதற்காகவும், அடைக்கலமாக ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன, என்பதை தாங்கள் அறியவேண்டும். அப்பொருள்களுக்குத் தாங்கள் அக்தார்கள், டிரஸ்டிகள், தர்மகர்த்தர்கள், ஆவீர்கள். சொந்தக்காரர்களல்லர்; இதுவே நன்கொடை கொடுத்தவர்களின் கருத்து; பொதுஜன அபிப்பிராயமும் இதுவே; சாஸ்திர தாத்பரியமும் இதுவே; இதற்கு மாறாக எள்ளளவேனும் சுவப்பிரயோஜனம் நாடி ஒரு காசும் செலவழிப்பீர்களேயாகில் அது மகா பாபம். பசுமாடு பயிரில் மேய்ந்தால் கண்டு பிடித்து விரட்டிவிடுவார்கள், புலித்தோல் போர்த்து மேய்ந்தால் கண்டுபிடித்து விரட்டல் எங்ஙனம்?

“ வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று ”—குறள்

அவ்வண்ணம் நடைபெறுவீர்ளாகில் துறவிஸ்தானம் என்ற உயர் நலம் அமைந்த பதவியை இழக்கிறதுமன்றி, சிரேயஸ்கரமான பதவியையும் இழப்பீர்கள் என்பதை தாங்கள் நன்கு அறியவேண்டும்.

(8) அந்தந்த மடத்தைச்சார்ந்தவர்களுக்கு தங்கு தடையின்றி சாப்பாடு போட்டுவருகிறீர்கள். அதனால் சோம்பலாளிகளைத்தான் உண்டு பண்ணுகிறீர்கள், அவர்கள் நடமாடும் இறைப்பைகளாக இப்போது திரிகின்றார்கள். அந்நமிடுதல் நலமே. ஆனால் அது பிரயோஜனமுள்ளதாக இருத்தல் வேண்டும். அந்நடமாடும் இறைப்பைகளை, கல்வி அறிவு, கேள்விகளால் நடமாடும் கோவில்களாகச் செய்யுங்கள். அதனால் சுகிருதம் உண்டு.

(9) பக்த ஜனங்களின் பிரயோஜனத்திற்காக, யாத்திரை செய்கிறதில், வீணை பரிவாரங்களையும், ஆடம்பரங்களையும் தவிர்த்தால், யாத்திரை சுலபமாகவும் அதிகப்பிரயோஜனமுள்ளதாகவும் நிகழும்; சத்காலக்ஷேபம் செய்வதற்கு சாவகாசங்களும் ஏற்படும். சந்நியாசிகள் வாகனங்களில் ஏறக்கூடாது என்ற விதியிருக்கிறது. பிராணிஹிம்சை ஏற்படுவதால் அன்றோ? மனிதவாகனமான சிவிகையில் ஏறுதல் கொடிய பாவம். இதைத் தவிர்த்து ஒருவிதமான பாபத்

திற்கும் உள்ளாகாமல், ரயில்வண்டி மோட்டார்கார், பைஸக்கில் முதலிய நவீன வண்டிகளில், ஆசாரக்குறைவுக்கு இடமில்லாமல் ஏற்பாடு செய்து, யாத்திரை செய்தல் நன்மையாம். உயிர்பாகமான ஞானமுறையை விடாமல் உடல்பாகமான வெளிவிஷயங்களில் காலத்தை அனுசரித்து நடத்தல் அறிவுபற்றியதாம். கிறிஸ்து மதத்தில் உழைக்கின்ற பாதரிமார்களைப்பாருங்கள்; எங்கே எங்கே எந்த வாகனம் கிடைக்குமோ அதைக் கைக்கொண்டு, காரியத்தின்மேல் கண்ணோக்காய், எத்தனையோ பெரியகாரியங்களைச்செய்து கொண்டுவருகிறார்கள். இவ்விஷயத்தில், அவர்களைப்போல தாங்களும் நடைபெறுவீர்களாகில், மிக லாபகரமாயும் பலனுள்ளதாகவும் முடியும். "பழையனகழிதலும், புதியனபுகுதலும், வழுவலகாலவகையினானே" என்ற ஆன்றோர்வாக்கை அநுசரித்து நடத்தல்வேண்டும். ஞானமுறையைத்தவிர, மற்றவெளிப்படையான ஸ்தூல பாகங்களை காலத்துக்கு நேர்மையாக மாற்றிக்கொள்ளுதல் தவறன்று. அப்படி நடைப்பீர்களாக.

(10) ஊர்கோலமென்றும், பாணகாக்ஷியென்றும், உத்தியோகஸ்தர் விருந்தென்றும், அவர்களுக்கு சாதராக்கள் போர்த்துதல் என்றும், ஆங்கிலர்களுக்கு தீனி சாப்பாட்டுக்கென்றும், வியவகாரத்திற்கென்றும், சிறு விளையாட்டுகளுக்கென்றும், பூர்வ ஆச்சிரமத்தினர்களான தாயத்தார், மாமன், தாய்தந்தையர், முதலினோர்க்கு என்றும், இவ்விதமாகப் பலவாறான விநியோகங்கள் செய்தல் தர்மமுறை அன்று. சாஸ்திர விரோதமானவை. ஆங்கிலச்சட்டமும் சம்மதிக்காது.

(11) மடத்தின் சொத்துக்களை ஹீனக்கிரயத்துக்கு விக்கிரயஞ்செய்தலும், பந்துக்கள் முதலாயினருக்கு அவைகளை ஹீனக்குத்தகைக்குக்கொடுத்தலும் ஆகிய இவைபோன்ற விநியோகங்கள் நியாயமல்ல.

(12) இககாலஸ்திதியைப்பாருங்கள்; பெரும்பாலும் ஜனங்கள் கல்வி கேள்வியில்லாமல் மூடர்களாக இருக்கின்றதைக்கவனியுங்கள். அவர்களுக்குக்கல்விப்பயிற்சி, ஞானப்பயிற்சி, செய்வித்தல் உங்

கள் கடமை யென்றும் அறியுங்கள். நம்மவர்கள் அவரவர்கள் சமயமுறை அறியாமையால், கிறிஸ்து மதத்தில் விளக்குப்பூச்சிபோல் விழுந்து மடிகிருர்கள், என்பதையும் உணருங்கள். நம்முடைய சநாதநதர்மம் ஒப்பு உயர்வு அற்றமதம். இம்மதம்தான் உலகமெங்கும் பரவவேண்டும் என்றும், நாஸ்திகம் அதிகரித்துக்கொண்டுவருகிற மேல் நாட்டாருக்கு முக்கியமாக பிராஞ்சுக்காரர்களுக்கு, ஹிந்துமதமும் அதன் தர்சநங்களும் மிகவும் அநுகூலமானவைகளென்றும், அவைகளால் தான் அவர்கள் நாஸ்திகத்தினின்று ஆஸ்திகத்திற்குத் திரும்பிவரக்கூடுமென்றும், அவைகளால் தான் நலம்பெறுவார்கள் என்றும், பிரான்சுதேசத்து வித்வச்சிரோமணி பண்டிதஷூல்ஸ் (Dr: Schultz) அம்மையார் ஷைதேசத்து அரசாட்சிமுறையில்விவரமான ரிபோர்ட்டு செய்திருக்கிருர்என்பதை நீங்கள் அறியவேண்டும். இந்நிலையில் நம்மவர்கள், கீழாயினோராக இருந்தாலும் சரி, மேலானகுலத்தினோராயிருந்தாலும் சரி, நம்முடைய உயர் நலம் உள்ளமதத்தையும் அதன்ஆசாரங்களையும் விட்டு, கிறிஸ்துமதத்தில் சேர்கின்றது மிகவும் பரிதபிக்கக்கூடிய விஷயமன்றோ? சித்திரகுப்தன் கணக்கில் இந்தப்பாபசம்பவத்தின் கர்மபலனில் மடாதிபதிகளுக்கு ஒரு பெரிய பகுதி ஏற்படுமென்றும் நீங்கள் அறியவேண்டும். ஆகையால் நமக்கென்ன, என்று தூங்காமல்எழுமின்!விழிமின்! பெரியோர்கள் நீதிமுறையை நாடுமின்! அதை திரும்பவும் இத்தேசத்தின் கண் நாட்டுமின்! ஜனங்கள், நல் வழிநடத்தும் தலைமையார் இல்லாமல் தபிக்கின்றுர்கள். ஒரு ஊரில் கிறிஸ்து மார்க்கத்தில், ஒரு சிறுவன் சேர்க்கப்பட்டால், அச்சமயத்தில் நம்மவர்கள் படும் துன்பமும், துயரமும், பரிதபிப்பும், இத்தன்மையென நீங்கள் அறிவீர்களா ? அதற்கு காரணம் நீங்கள் அல்லவா ? உங்களுடைய தர்மத்தை நீங்கள் சரிவர செய்யாமையின் காரணமாக அஃது உண்டானதன்றோ? எங்களுடன் சற்றுநேரம் மனம்ஒப்பி உள்நோக்கிச்சிந்தியுங்கள். அப்போதாவது நீங்கள் மனம் நோவீர்கள். உங்கள் பக்த கோடிகளான ஜனங்களிடம்காருண்ணியமும்வைப்பீர்கள். அவர்களின் பொருட்டு உண்மையாக வேலைசெய்வீர்கள்.

(13) நம் தேசமானது புண்ணிய பூமி, ஞானிகள் எப்போதும் இருக்கும் இடம். இதை மஹரிஷிகள் எப்போதும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தாரைக்கொண்டு, அப்படி நடத்த முடியாமல்போனால் அன்னியர்களைக்கொண்டாவது, நம்முடைய ஞான மார்க்கத்தை நாம் கைநழுவவிடாமல் ஆதரிக்கிறார்கள். இக்காரணம் பற்றியே பிரஹ்மஞான சபை நம்தேசத்தில் ஏற்பட்டு நமக்கு அனுகூலத்தைச்செய்துகொண்டு வருகிறது. நம்தேசத்தில் இற்றைக்கு 30 வருஷங்களுக்கு முன்னர் நம்முடைய வாலிபர்களின் மனோ பாவத்திற்கும், இப்போது அவர்களின் மனோ பாவத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறிவுள்ளார் யாவரும் அறிவர். அப்போது ஈசுவரபக்தி குன்றியது. தேச அபிமானம், மத அபிமானம், பாஷை அபிமானம், என்ற வார்த்தைகளைக் கூட நாம் கேட்டோமில்லை. ஆங்கில பள்ளிக்கூடங்களில் படித்து வந்த மாணவர்கள், வேதநிந்தை தெய்வநிந்தை, சமயநிந்தை புரிவாராயினர். "நாத்திகம் பேசிநாத் தழும் பேறினர்" அத்திரி, பிருகு, வசிஷ்டர், வாமதேவர், யாக்கிய வல்கியர், முதலிய ரிஷிகளைப்பற்றி நிந்தனையாகவே, பேசுவார்கள். சைவ வைஷ்ணவ ஆசாரியார்களை தூஷிப்பார்கள். பசிதீரஉண்பதும் உறங்குவதுமே, இப்பிரபஞ்ச வாழ்க்கையென நினைப்பாராயினர். முன்னும், பின்னும் இல்லை என்றும், கண்டதே காட்சி என்றும், கொண்டதே மோக்ஷம் என்றும், வாய்ப்பறையறையும் கொள்கை உடையாராயினர்.

(14) கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன்உபதேசிக்கிறதாவது:- " உலகில் ஞானம் குன்றி அஞ்ஞானம்தலைப்பட்டு அபிவிர்த்தியாகும் காலத்தில் தர்மத்தை நிலைநிறுத்தவும், அதர்மத்தைத்தொலைக்கவும்' பகவான் அவதாரம் செய்திடுவர்" இந்த அருமையானஆறுதலுள்ள வாக்கின் பிரகாரம், ஈசுவர அவதாரம்வரவேண்டியகாலம்சமீபத்தில் சம்பவிக்கும். இந்த வருஷம் ஜனவரிமீ 11ௗ கிரகங்களின் நிலை மிக அற்புதமானதென்றும், இதற்கு பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னர் இவ்வித மிருந்ததென்றும், அது மஹாபுருஷன் அவதாரம் சமீபத்தில் நடைபெறவேண்டியகாலத்தை சூசிப்பிக்கிறதென்றும், ஒரு ஜோதிஷசாஸ்திரி சொல்லியிருக்கின்றார். அம்மஹா புருஷன்

அவதாரம் ஆகுமுன்னர், உலகம் அவர் வரவை அங்கீகரிக்க ஆயத்த மாகவேண்டும். அதற்காகவே "பிரஹ்மஞானசபை" என்ற சங்கமா னது உலகத்தில் 1875-ம் ஞு நவம்பர்மீ 17உ தோன்றியது. அமெ ரிக்காக் கண்டத்தில் ஐக்கிய மாகாணத்தில், நியூயார்க்கு என்னும்பிர தான பட்டணத்தில், "பிளவாட்ஸ்கி" என்னும் அம்மையாரையும் "கர்னல் ஆல்காட்டு" என்பவரையும் உலகத்தில்முன்னிற்கச்செய்து, இந்தப் புண்ணியதேசத்தின் வடக்கிலுள்ள ஹிமாசலவாஸிகளாகிய இரண்டு மஹரிஷிகள், இந்த பிரஹ்மஞானசபையை ஸ்தாபித்தார் கள். பின்பு வரவர மற்றைய ரிடிகளும் மதஸ்தாபனுசாரியார்களும் இச்சபையை ஆதரித்துவருகின்றார்கள். அவர்களின் ஆதரவு பலத் தால் இச்சபையானது மேன்மேலும் அபிவிருத்தியையடைந்துவரு கிறது. 1878-ம் ஞுத்தில் இப்பரத கண்டத்திற்கு வந்து பம்பாய் நகர் சேர்ந்து அந்நகரில்சொற்பகாலம் தங்கிஇருந்து, பின்னர் 1882- ஞுத்தில் சென்னை நகரைச்சார்ந்த ஆதியார் என்ற க்ஷேத்திரத்தில் சமுத்திரக்கரை ஓரமாக ரிஷிகள் ஆச்சிரமமென்று சொல்லத்தகுந்த ஓர் விஸ்தாரமான தோட்டத்தில், ஸ்திரமான வாசஸ்தானத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது. இச்சபையானது மகரிஷிகளின் அனுக்கிரகத்தால் ஆலா விருக்ஷம் போன்று பரவி பல இடங்களில் கிளைச்சபைகள் என்ற விழுதுகள் விட்டு விசாலமாகிக்கொண்டு வருகி றது. இந்தச்சபையை இப்போதுநடத்துகின்றவர் பிரஹ்மவாதினி யாயும், நம்தேசம் முன்போல், மேன்மைபெற வேண்டுமென விடா முயற்சியால் உழைக்கின்றவருமான, அந்நிபிஸன்ட் அம்மையார். இச்சபையின் உதவியாலும் நம்தேசத்தில் ஆஸ்திகபுத்தி தழைத்து ஓங்கிவருகிறது. நம்முடைய சநாதநதர்மம் என்ற ஹிந்துமதம் முன் போல நல்ல ஸ்திதிக்கு வருகிறதற்கு அநுகூலமான எல்லா உதவிக ளும் எவ்விடமிருந்து கிடைத்தாலும், அவைகள் நம்மால் ஆதரிக்கத் தக்கன, அங்கீகரிக்கத்தக்கன. நாம் மேன்மேலும் நலம்பெறவேண்டு மானால் இந்த அம்மையாருடன் நீங்களும் கலந்துகொண்டு நம்தேச த்திற்கு வேண்டிய பொது நன்மைகளைநாடும்படி வேண்டுகின்றோம்'

(15) மேற்கண்டபடி செய்வீர்களேயாகில், நம்தேசம் ஞானவழி யில் நடைபெறும். சிரேயஸ் அடையும். அதனால் உலகத்திற்கு

க்ஷேமம் உண்டாகும். விவேகாநந்தரைப் போன்ற ஞான உபதேசி களுண்டாகி பலதேசம் போய், சநாதனதர்மத்தைப் பரவச்செய்வார் கள். அதனல் நம்தேசம் மகிமை பெறும். இகத்திலும் பரத்தி லும் நன்மையுண்டாகும். அப்படி நீங்கள் செய்யாமல் உள்ளடங்கி சுயநயம் பாராட்டி ஊனை ஓம்பி, உங்கள் கடமையையும் உத்தரவா தத்தையும் பறக்கவிட்டு, தூங்குவீர்களேயாகில், அந்நியர்கள் இத் தேசம் மேன்மைபெறவேண்டுமென்று முன்னின்றுமுயர்ச்சித்து வருகின்றனர்கள். அவர்களால் கடைமுறையில் க்ஷேமம் பெறும். மஹிமை அடையும். ஆனல் அந்தக்கீர்த்தி உங்களைவிட்டு விலகிப் போகும். மடங்களின் க்ஷீணதசை வந்துவிடும். இக்காலத்திற்குத் தக்கபடி மடாதிபதிகள் முன்வந்து ஜனங்களின் ஞானப்பயிற்சியை நடத்தாமற்போனல், அம்மடாதிபதிகளால் இனி உலகத்திற்கு நலம் பயக்கக்கூடியது ஒன்றுமில்லை என ஏற்படும். அவர்களும் உலகநாட் டத்தினின்று மறைவார்கள், அவர்களுடைய உத்தரவாதத்தை வேறு சிலர் வகிக்கும்படி ஈசுவரன் செய்வார். எல்லாக் கர்மமும் அவர் கர்மம் அன்றோ? உங்களுடைய பிரகிருத உயர்ந்ததும்கவர்வ முமான ஸ்திதி மங்கும். மறையும், பொய்த்தும் போம்.

16. அப்படி நேரிடாமல் இக்காலத்தின் கதியை உணர்ந்து, ஜனங்களுக்கு அனுகூலமான நற்காரியங்களைப் பொறுத்து, நீங்கள் கொண்டு செலுத்தவேண்டுமென பிரார்த்திக்கிறோம். முன்போல இப்போதும் எங்களை நல்வழிப்படுத்துமின். எல்லாராலும் நன்குமதி க்கப்பெற்ற குருக்களாக நடைபெறுமின். இதுவே எங்கள் முறை யாம். இதற்கு அனுகூலான உண்மையான அபயமான உத்தரம் வேண்டுகின்றோம். எல்லாம்வல்ல ஈசன் உங்கள் மூலமாக நம்தேச த்திற்கு நன்மையை அளிப்பாராக.

ஓம் தத் சத்

சாதாரண ஹு
வைகாசிமீ
பௌரணை

ப. நாராயணன்.

# ஏகாதசி விரதம்.

## அதின் உண்மை.

பூர்வகாலத்தில் நம் முன்னோர்களான ஞானிகள் உண்மைகளை சுருதி, ஸ்மிருதி, ஆகம, புராண இதிஹாஸங்கள் மூலமாய் வெளியிட்டிருக்கிறார்கள். தவிரவும் அவைகளை ஆலயங்களிலும், புண்ணிய க்ஷேத்திரங்களிலும், புண்ணிய தீர்த்தங்களிலும் சம்பந்தப்படுத்திக்காட்டியிருக்கின்றார்கள். மேலும் விரதாதி அநுஷ்டானங்களாலும் வெளியிட்டிருக்கிறார்கள். அவ்விரதங்கள் அல்லது நோன்புகளில், ஞான விஷயங்களைப் புகட்டி வைத்திருக்கின்றார்கள். சாதாரண ஜனங்களுக்கு வெளிப்படையான கர்மங்களாகவும், அறிஞர்களுக்கு ஞான உபதேசங்களாகவும் இவ்விரதங்கள் நடைபெறுகின்றன. அவ்விரதங்களில் நாம் விசாரிக்க எடுத்துக்கொண்டது, ஏகாதசிவிரதமாம். ஏகாதசம் என்றால் பதினொன்று; பிரதிபக்ஷ ஆரம்பமுதல் 11-வது நாளில் அநுஷ்டிக்கப்படும் விரதமாதலின், அது ஏகாதசி விரதமெனப்படும். இது ஸ்தூல அர்த்தம். ஆழ்ந்து பார்க்கின், இதன் ரகஸ்யார்த்தம் காணப்படும். ஏகாதசமென்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந் திரியங்கள் ஐந்தும் அவைகளின் பதியாகிய மனசும், ஆக பதினொரு இந்திரியங்கள் நம்மிட மிருக்கின்றன. கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் ஜடமாம். ஜடமாவது ஸ்வசக்தியின்றி, வேறொருசக்தியின் ஆதாரத்தால் இயங்கும் தன்மையுடையது. அவ்வாறே ஜடமாகிய தசேந்திரியங்கள் இயங்குவதற்கு ஆதாரமாயுள்ளது மனமெனத் தெரிகிறது. மனத்தின் சம்பந்தமின்றி யாதொரு இந்திரியமும் பிரவர்த்தியாது. சுரோத்திரேந்திரியத்தோடுமனமானது சம்பந்தமுற்று, இனிய கானங்களையோ, இதர சப்தங்களையோ கிரகிக்கும்போது, சக்ஷுஸ் இந்திரியம் நன்றாய்த் திறக்கப்பட்டிருப்பினும் அது எதிரிலுள்ள உருவங்களை கிரகிப்பதில்லையென்பதைக்கவனித்தால் அறிவோம் ஞானேந்திரியம் என்றால் ஞானமுள்ள இந்திரியமென்று அர்த்த

* இவ்வுபந்நியாசம் கள்ளிக்கோட்டையில் மார்ச்சு மாசத்தில் கூடிய பிரமஞான சபையில் வாசிக்கப்பட்டது.

மில்லை. உலக விஷயங்களின் அறிவு, மனத்திற்குப் புலப்பட ஞானேந்திரியங்கள் காரணமாயிருக்கின்றன. எந்த இந்திரியத்தோடு மனது சேரவில்லையோ, அந்த இந்திரியத்தின்மூலம் ஏற்படும் அறிவு உண்டாகாது.

ஆனால் உண்மையில் மனதும் ஜடம். விசாரணையில் வேறொரு சக்தியைக்கொண்டு மனது இயங்குகிறது என்று தெளிவாகும். அதைப் புத்தி என்பார். புத்தியும் ஜடமாம். என்மனம் என் புத்தி என்கின்றோம். அதை உரிமைப் படுத்துகிறோம். அதை உடையவன் வேறுஒருவன் உளன். அவனே ஜீவாத்மா. ஜீவாத்மா மனதென்னும் உபகரணத்தைக்கொண்டு ஞானேந்திரியங்களாகிய ஜன்னல்களின்வழியாய்ப்பிரபஞ்ச விஷயங்களைப் பலவாறு கிரகிக்கிறான். அவ்வாறு கிரகிக்க சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்த விஷயங்களை யனுபவிக்க வேண்டி கர்மேந்திரியங்களின் வழியாய் சதா வேலைசெய்துகொண்டிருப்பான். இக்காரணத்தினாலேதான் இந்திரியங்கள் சேவகர்களென்றும், மனம் இராஜனென்றும் சொல்லப்படுகின்றன.

ஸ்ரீமத் பகவத்கீதை 3-ம் அத்தியாயம் 42-ம் சுலோகத்தில்
"இந்த்ரியாணி பராண்யாஹு:, இந்த்ரியேப்ய: பரம் மந:"
என்று சொல்லியபடி மனதானது இந்திரியங்களைவிட உத்கிருஷ்டமுள்ளதாயிருக்கின்றது. மனது சம்யோகமடையும் காலத்தில், அதாவது மனது பஹிர் முகப்படாமல் அந்தர் முகப்பட்டுத் தன்னிலையிலிருக்கும்போது, மனத்தின் பிரவிர்த்தியில்லாமையால், இந்திரியங்களின் தொழில்கள் நிகழ்வதில்லை. மனது இந்திரியங்களோடு கூடி விஷயாநுபவங்களின் பொருட்டுச் சுவப்பிரயோஜனமான பிரபஞ்ச வியாபாரங்களில் செல்வதே பிரவர்த்திமார்க்கம். இவ்விதப் பிரவர்த்தி மார்க்கத்தை யநுசரிப்பவர்களே விஷயாநுபவங்களின் நிமித்தம் திரும்பத்திரும்ப ஜன்மங்களெடுக்கிறார்கள். மனதானது இந்திரியங்களுடன் கூடி ஸ்வப்பிரயோஜனமாயுள்ள விஷயாநுபவங்களைக் குறித்துப் பிரயத்தனம் செய்யாமல், ஆத்மமார்க்கத்தில் திரும்பினால் அவர்கள் நிவர்த்திமார்க்கத்தில் நடைபெறுகிறவர்கள். இந்த நிவர்த்திமார்க்கத்தை அவலம்பிப்போர் ஸ்வப்பிரயோஜனமாயுள்ள காமிய கருமங்களைக் கொஞ்சமேனும் அனுஷ்டியார்கள். அத

ஞல் கருமத்தால் பந்திக்கப்படாமல், ஜனனமரணப் பிரவாஹங்களைக் கடப்பார். ஏகாதசி விரதமானது அந்திரிந்திரியமென்னும் மனத்தோடு கூடிய பதினொரு இந்திரியங்களுடன் சம்பந்தப்பட்ட விஷயமாயிருக்கின்றது. கீதாசாஸ்திரத்திலும் "இந்திரியாணிதசைகஞ்ச" இந்திரியங்கள் பதினொன்றுஎன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஞானேந்திரியங்கள் ஐந்து, காமேந்திரியங்கள் ஐந்து, மனம் ஒன்று ஆகபதினொன்றும். கீதையின் மற்றோரிடத்தில் கர்மேந்திரியங்கள் ஐந்தை நீக்கி "மந:ஷஷ்டாணீந்திரியாணி" என்று மனது ஆறாவதும் இந்திரியமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. கர்மேந்திரியங்கள் ஐந்தும் சேர்த்துப்பார்த்தால் மனது 11வது இந்திரியமாகின்றது.

இவ்வேகாதசி விரதம் உபவாஸ விரதமென்றும் சொல்லப்பெறுகிறது. இதனுல் அந்தத்தினத்தில் விரதத்தை ஆசரிப்பவர்கள், ஆகாரத்தை வர்ஜித்து, உபவாசமிருக்கும் நியமத்தைக் கொள்ளவேண்டியது. இந்திரியங்களை அவைகளின் விஷயங்களினின்று தடுத்து நிறுத்தலே உபவாஸமாம். உபவாஸம் என்றுல், சமீபத்தில் இருத்தல் என்பது பொருள். எதன் சமீபத்தில் என்றுல், ஹிருதயத்திலிருக்கின்ற பரமாத்மாவின் சமீபத்தில்; அவ்விதம் மனது ஒருமுகப்பட்டிருத்தலுக்கு, இந்திரியங்கள் மூலமாக விஷய நுகர்ச்சி இல்லாமல் இருக்கவேண்டுவது, அதனுல் உபவாஸம் என்ற பதம் பட்டினியாய் இருத்தலென்று இப்போது பொருள் அமைந்திருக்கின்றது. பட்டினியாய் இருத்தல் சாதனமாக, ஈசுவரனை வழிபடல் இலகுவாய் இருக்கின்றமையால் என்று அறிக. இக்காலத்தில் ஏகாதசிவிரதமென்றுல் வழக்கமாய் உண்ணும் அந்நத்தைத் தவிர்த்து பலவிதமான சாமான்கள் சேர்த்து பக்குவங்கள் செய்து உண்பதாக மாத்திரம் முடிந்தது. பகவத் காலக்ஷேபம் இப்பொழுது உண்மையில் பொய்த்துப் போயிருக்கின்றது.

இந்த ஏகாதசி விரதம் அனுஷ்டித்தல் மிக விசேஷமானது. அதிலும் அடியிற் கண்ட காலங்களில் சம்பவிக்கும் ஏகாதசிகள் மகா விசேஷமானவை. ஆஷாட சுக்ல பக்ஷம் சயன ஏகாதசி யென்றும்,

ஷாத்ரபத சுக்ல பக்ஷம் ஏகாதசி பர்வர்த்தன ஏகாதசி யென்றும், கார்த்திகை சுக்ல பக்ஷ ஏகாதசி உத்தான ஏகாதசி யென்றும், புஷ்ய சுக்லபக்ஷம் 11ம் நாள் பரமபத ஏகாதசி அல்லது வைகுண்ட ஏகாதசியென்றும், வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு ஏகாதசிகளின் பெயர்களாலே நமது பூர்வீகர்கள் ஞான விஷயங்களை பிரிதீகப் படுத்தியிருக்கின்றார்கள். இவைகள் பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி லயம், இவைகளையும் ஜீவர்களுடைய முக்திஸ்திதிகளையும், சூசிப்பிக்கின்றன. முதலில்நாம் பரமபதஏகாதசியைக்குறித்து விசாரிப்போம்.

இதனை பரம ப்வித்திரமான தினமென்றெண்ணி நம்மவர்கள் புண்ய நதிகளிலோ, அவைகளிலில்லாவிட்டால் புஷ்கரணிகளிலோ தீர்த்தமாடி, கோவிலுக்குச்சென்று, ஸ்வாமியைத்தரிசித்து, அது வரையில் வழக்கப்படி ஸ்வாமி எழுந்தருளும் வழியை விட்டு, வடக்கு வாசலின் வழியாய் ஸ்வாமியை வெளிப்படுத்திக்கொண்டு செல்லுவார்கள். அந்த வாசலின் வழியாய் ஸ்வாமியோடு கூட செல்பவர்க்கு வைகுண்ட பதவி கிடைக்குமென நம்பி, ஜனங்கள் அவ்வாசல் வழியே ஸ்வாமியோடு செல்வார்கள். அன்று தினம் பகவான் வைகுண்டமடைந்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். இது ஜீவர்களின் முக்தாவஸ்தையையும், ஈசுவர சிருஷ்டியின் பிரளயாவஸ்தையையும், குறிப்பிடுகின்றது. தேசகாலப் பரிச்சின்னமின்றி, நிருவிகாரமாயும், நிரஞ்சனமாயும், நிஷ்களங்கமாயும், நிராமயமாயும், நிர்க்குணமாயுமுள்ள பரப் பிர்ம வஸ்துவினின்று சகுணமான ஈசுவரன் அவதரித்து, சமஸ்தமான சிருஷ்டியைச் செய்கிறார்என்பதாக சாஸ்திரங்களின் அபிப்பிராயம்,

பரப்பிர்ம ஸ்வரூபமானது கேவலம் ஞானஸ்வரூபமாய் எங்கும் நிறைந்திருப்பதாலும், ஞானம் சுத்தமாய் நிர்மலமாயிருப்பதாலும், அதனைப் பால் சமுத்திரம் அல்லது க்ஷீராப்தி யென்னும் பெயரால் பிரிதீகப்படுத்தியிருக்கிறார்கள். ஈசுவரஸ்தானமே பரப்பிர்மத்தின் ஸ்தானமாகையாலும், ஈசுவரன் பரப்பிர்மத்தைவிட பின்னமுள்ளவரல்லாமையாலும், பரப்பிர்ம்மத்தையே அடைவார்கள் என்பதைத்தெரிவிக்கின்றதாக பரமபதஏகாதசி என்று, இந்தவைகுண்ட

ஏகாதசிக்குப்பெயர் கிடைத்திருக்கிறது. இவ்வித நிர்க்குண பிரஹ்மத்தினின்று ஸகுண ஈசுவரன் உற்பவித்து, சிருஷ்டியாதி ஜகத் வியாபாரங்களை ஆரம்பித்து சிறிது காலம் நடத்தும் ஜகத் வியாபார காலத்தை, அவருக்கு ஜாக்கிரதா வஸ்தை யென்று சொல்லப்படுகிறது. இதை பிரவர்த்தி தர்மத்தை யநுசரித்த நிலைமை யென்றும், சொல்லுகிறதுண்டு. மேலும் இவ்வித பிரவிர்த்தியின் தர்மம்மனிதர்களைப் போல ஈசுவரனை கர்ம பந்தத்திற்குள்ளாக்கி விடமாட்டாது. அவருக்கு இந்த தர்மங்கள் லீலையாக, அதாவது விளையாட்டாக இருக்கின்றன. இவ்வித பிரவர்த்தி காலத்தில், அநேக ஜீவர்கள் ஜன்ம பரம்பரைகளாலே அடைந்த ஞானத்தால் ஈசுவரனை ஆராதித்து, அவரை அடைவார்கள். சிறிதுகாலம் ஈசுவரன் ஜகத் வியாபாரங்களைவிட்டொழிப்பார். இதுவே அவருக்கு ஸுஷுப்தி அவஸ்தையென்றும், அல்லது நிவர்த்தி தர்மத்தைக்கொண்ட நிலைமை என்றும் சொல்லுவார்கள்.

ஈசுவரன் ஜகத் வியாபாரங்களை விட்டு, ஒழித்தவுடனே, முக்தர்களான ஜீவர்களுடன் தமது, யதார்த்தஸ்தானமாகிய பரப்பிரஹ்மத்தினிடம் பேதமின்றி ஐக்கியத்தை அடைவார். இவ்வாறு சிருஷ்டியை விட்டொழித்து, முக்த ஜீவர்களுடன் சிருஷ்டித்தொழிலிற்குத் தமக்கு சகாய பூதர்களாயிருக்கும் தேவதைகளுடன் பரப்பிரஹ்மத்தினிடமாக ஈசுவரன் ஐக்கியத்தை அடைந்தகாலமே பரமபத ஏகாதசியென்று, சூசிப்பிக்கப்படுகின்றது. பரமபத மெனின் பரப்பிரஹ்மமென்றே அர்த்தம். ஜகத் வியாபாரகாலத்தில் ஈசுவர சக்திகள் பஹிர்முகப்பட்டு சிருஷ்டியாதி கர்மங்களில் பிரவர்த்திக்கும். அந்தச்சக்திகள் ஜகத் வியாபாரத்தில் பிரவர்த்திக்காமல் உள்ளுக்கு இழுக்கப்படும்போது ஜகத் லயமாகும். இதுவே ஈசுவரன் தனதுஸ்வஸ்தானத்திற்குப் போதலாம். இதை தேவாலயங்களில் உத்ஸவ விக்கிரங்கள் வெளிப்பட்டுக்கொண்டிருந்த வழக்கமான மார்க்கத்தை விட்டு ஷ ஏகாதசி தினத்தில், வடக்குவாசலின் வழியாய் விக்கிரங்கள் வெளிப்புறப்படுவதாலறியலாகும்.

வடக்கு வசலானது நமது லயகாலத்திற்கு அந்வயப்படும். நிர்யாணகாலத்தில், ஞானிகள் தங்கள் பிராணனை வழக்கமாய், சஞ்

சாரஞ்செய்துகொண்டிருந்த தேகத்தின் நவத்துவாரங்களின் வழி யாயும் சலிக்கவிடாமல், பிரஹ்ம ரந்தரத்தின் வழி செல்லும்படி செய்விப்பார்கள்.

“𑌶𑌤𑌂 𑌚𑍈𑌕𑌾 𑌚 𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌮𑍍𑌅𑌭𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑍈𑌕𑌾 । 𑌤𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌾𑌯𑌨𑍍
𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌙𑌨𑍍𑌯𑌾 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥”

என்ற கடோபநிஷத்து 6-வது வல்லி 16-வது மந்திரப்படி, ஹிருத யத்தில் 100நாடிகள் இருக்கின்றன. அவைகளில் சுழிமுனையென்னும் ஒருநாடி ஹிருதயத்தினின்று கிளம்பி சிரஸை பேதித்து வெளிப்படு கிறது. அந்தநாடியின்வழியாக யோகியானவன் மேல்சென்று மரண மற்றபதத்தை அடைகிறான். இதர நாடிகள் வழியாய் செல்லுகின் றவர்கள் சம்ஸார மார்க்கத்தில் பிரவர்த்திப்பவர்கள். ஆகையால் ஈசுவரனைப்போலவே வடக்கு வாசலென்னும் பிர்ம்மரந்திரத்தின் வழியாய் வெளிப்படக்கூடிய ஜீவர்கள் ஈசுவரனுடன் கூடி, பரப்பிர ஹ்மத்தை அடைவார்களென்ற கருத்தை, வடக்குவாசலின் வழியாய் ஸ்வாமியோடு கோவிலினின்று புறப்படுதலே முக்தி யென்பதாகச் சொல்லப்படுகின்றது. முன் பிரஸ்தாபித்த நான்கு வித ஏகாதசி களையும் ஈசுவரனுடைய ஜாக்கிர, ஸ்வப்ந, சுஷுப்தி, துரியாவஸ் தைகள் என்று கூடச்சொல்லலாம். கார்த்திகா சுத்தத்தில் ஏற்படும் உத்தான ஏகாதசியை ஈசுவரனுடைய ஜாக்கிரதாவஸ்தையாகவும், பாத்ர சுத்தத்தில் ஏற்படும் பரிவர்த்தன ஏகாதசியை ஸ்வப்னவஸ் தையாகவும், ஆஷாடசுத்தத்தில் ஏற்படும் சயன ஏகாதசியை சுஷுப்தி அவஸ்தையாகவும், புஷ்யசுத்தத்தில் ஏற்படும் பர மபத ஏகாதசியை துரியாவஸ்தையாகவும் சொல்லலாம்.

ஏகாதசி விரதாநுஷ்டானத்தில் தசமியன்று, ஏகவேளை போஜ னமென்றும், ஏகாதசியன்று சுத்த உபவாஸமென்றும், துவாதசி யன்று அதிகாலையில் பாரணை பண்ணவேண்டிய தென்றும், அநு ஷ்டானமிருக்கிறது. தசம் என்றால் பத்து. ஆகையால்தான் தசமி பத்தாம் தினத்தைக் குறிக்கிறது. தசேந்திரியங்களும் நீண்ட காலங்களாய் பட்டிமாட்டைப்போல் விஷயாதிகளில் ரமித்துக்கொ

ண்டிருந்தன. பட்டிமாட்டை கிரமக்கிரமமாகப் பழக்குவது போல வே, ஒரே சமயத்தில் அடக்கல் அசாத்தியமானது. இந்திரியங்களை ஏராளமான விஷயாதிகளில் செல்லவிடாமல் சுவல்ப விஷயத்தோடு மாத்திரம் நிற்கும்படி செய்யுமாம். இதுவே தசமியன்று நிகழும் ஏகவேளை போஜனத்தின் கருத்து: தசேந்திரியங்களையும் ஜயித்து மனசு உள்பட பதினொன்றும் சேஷ்டைகளை விட்டு ஒடுங்கி ஹிருதய கமலத்திலிருக்கின்ற ஈசுவரனிடம் சமீபத்தில் இருப்பதே, ஏகாதசி உபவாஸம் என்பதின் உண்மை. துவாதசி தினத்தின் அதிகாலையில் பாரணை செய்யப்பட வேண்டுமென்ற வழக்கத்தின் உண்மை என் னவென்றால், துவாதசம் என்றால் 12 பதினொன்றுக்கு அடுத்த எண் 12. பதினோராவது இந்திரியம் மனமென்று ஏற்பட்டபொழுது, 12 வது இந்திரியம் புத்தி யென்பதாகின்றது. இதனையே பகவத்கீதை 3வது அத்தியாயம் 42வது சுலோகத்தில் மனஸஸ்து பராபுத்தி: மனத்தைவிட புத்தி சிரேஷ்டமென்பதாய்ச் சொல்லியிருக்கிறது. மனத்தால் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு, மனத்தின் சேஷ் டைகளையும் ஒழித்து, மனத்தை பகவானிடத்தில் சேர்ப்பித்து, புத் தியாகிற ஞானத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பதே துவாதசி பாரணையின் கருத்து. ஏகாதசி மரணம், துவாதசி தகனம், சிலா க்கியமென்று வழங்குவதிலும் ஒரு விசேஷக் கருத்துண்டு. மன மாதி ஏகாதச இந்திரியங்களை அடக்குவதே ஏகாதசி மரணம், அவ ற்றின் பன்னிரண்டாம் இந்திரியமாகிற புத்தியென்னும் ஞானாக்னி யில் ஹோமம் செய்தலே துவாதசி தகனமாம். இவ்விதமே நம்ம வர் அனுஷ்டிக்கும் விரதங்களையெல்லாம் ஞானக்கண்ணால் ஆராய் ச்சி செய்வோமானால் அநேக உண்மைகள், அவைகளின்கண், புதை ந்து கிடைத்தலைக் காண்போம். அப்படி அறிந்து விரதாதிகளை அநு ஷ்டித்தால் நமக்கு ஸ்ரேயஸ் உண்டாகும்.

சுபமஸ்து,

வி. ராமச்சந்திர நாயக்கர்.

## பிளேக் முதலிய விஷ வியாதிகள் நேரிடும் போது நம்மவர் நடத்தவேண்டிய முறை.

சர்க்காராலும், முனிசிபாலிடியாராலும், தாலூகா போர்டு டிஸ்ரிக்டு போர்டாராலும், விஷ வியாதிகள் வருவதற்கு முன்னரும், மேற்படி வியாதிகள் வந்த பின்னரும், அவைகள் வராமல் தடுக்கவும், வந்தமேல் சிகித்ஸைகள் பண்ணவும் ஏராளமான திரவியங்கள் செலவழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் செலவழிக்கப்படும் பணத்தொகைக்குத்தக்கவாறு, ஜனங்களால் அவ்வளவு பலன் அநுபவிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் ஜனங்களுடைய அறிவீனமும், அவர்கள் சர்க்கார் வேலைக்காரர்களுடன் சேர்ந்து உதவி செய்யாமையுமாம்.

2. ஷை வியாதிகள் மூலம், தற்கால வைத்திய சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி, நுண்ணிய பிராணிக்கருக்கள் அல்லது வித்துக்களாம் (Organic germs). ஒருசதுர அங்குலத்தில் அவைகளை பத்துலக்ஷத்துக்குமேல் பரத்தி வைக்கலாம் என்று, கணக்கிட்டிருக்கின்றபடியால், அவைகள் ஒன்றின் பரிமாணம் எவ்வளவு நுண்ணியதாக இருக்கவேண்டுமென்று மனக்கண்ணால் மதிக்கலாம். இவைகள் கருத்தமயிர்க்கம்பிபோல் ஆகாசத்தினின்று உண்டாகின்றனவென்று ஒரு பெரிய ஞானியார் சொன்னார். ஆனால் அவைகளின் உண்மையையும் உண்டாகும் விதத்தையும் மேல்நாட்டு வைத்திய சாஸ்திரிகள் இன்னும் தெளிவாய்க் கண்டுபிடித்தார்களில்லை.

3. அந்நுண்ணிய கருக்கள், நாம் முகரும் வாயுவினாலும், பானம் செய்யும் ஜலத்தினாலும், உண்ணும் உணவினாலும், நம் சரீரத்திற்குள் புகுகின்றன. இரத்த சம்பந்தப்படுகின்றன. பின்பு அவைகளுக்கு வேண்டிய உணவுகளை இரத்தத்தினின்று பெறுகின்றன. ஒரு கரு உள்ளே புகுந்தால் சொற்ப நேரத்திற்குள் ஆயிரக்கணக்காய்ப் பலுகிப்பெருகுகின்றன. பால் தயிராய் திரிகிறதுபோல உயிர்க்கு ஆதாரமான இரத்தம், அக்கருக்கள் சம்பந்தித்த மாத்திரத்தில், பலவித விஷமமான மாறுதல்களை அடைகின்றன. கோசுக்

கள், ஈக்கள் முதலியவை இக்கருக்களை பலவிடங்களில் பரவும்படியாகச்செய்கின்றன. இரத்தம் கெடவே, சரீரத்திலுள்ள இயந்திரங்களும், இந்திரியங்களும் அவைகளின் வேலையைச் சரியாய்ச் செய்யாமல் சோர்வு அடைகின்றன. மரணம் சம்பவிக்கிறது.

4. இக்கருக்களால் ஏற்படும் வியாதிக்குத் தவராமல் பலிக்கும் மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த வியாதி ஒரு ஊருக்கு வராமல் தடுக்கவும், வந்ததின்மேல் பரவாமல் தடுக்கவும்தான் முயற்சிக்கவேண்டும். இவ்விஷயத்தில் நம்முயற்சி நடைபெறவேண்டிய முறைகள் அடியில் வருமாறு ?

(1) அதைரியம் கொள்ளக்கூடாது. எல்லாம் ஈசன் செயலென நினைந்து மனோ தைரியம் கொள்ளவேண்டும். இந்தகைய மனோ நிலையே, வியாதி பற்றுமல் தடுக்கும்.

(2) ஈக்கள், கொசுக்கள் தங்கி நிற்பதற்கு ஆஸ்பதமான சிறு ஜலத் தேக்கங்களை சுத்த மண்ணால் மூடிவிடவேண்டும். நாம் வசிக்கும் வீதியென்ன, வீடு என்ன இவைகளை பரிசுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். ஈக்கள், கொசுகள் மொய்க்கும் படியான அழுகிய பதார்த்தங்களை அப்புறப்படுத்தி எரித்தல் வேண்டும் ; கந்தகம் கோல் டார் (Coal Tar) இவைகளை பல இடங்களிலுள்ள குப்பைகளின்மேல் போட்டு நெருப்பு வைத்து எரிக்கவேண்டும்.

(3) சுத்தமான உணவும் சுத்தமான பானமும் உட்கொள்ளவேண்டும். சுத்தமான கிணற்று ஜலத்தை கொணர்ந்து, தள தள என்று கொதிப்பித்து அந்த கொதித்த ஜலத்தை, சுத்தமானபானையில் வைத்து ஆற்றிக் குளிரவைத்து- பின்பு பானம் பண்ணவேண்டும். உட் கொள்ளும் எல்லாப்பதார்த்தங்களையும், ஈ, கொசு நாடாமல், சுத்தமான மூடியால் மூடிவைத்துக்கொள்ளவேண்டும். எல்லாமாமிசத்தையும் வர்ஜிக்கவேண்டும். கஞ்சா, கள், சாராயம் முதலியவைகளையும், புகைச்சுருட்டு முதலியவைகளையும் சுத்தமாய் தவிர்க்க வேண்டும். ஸ்தூல சரீரத்தை நல்லெண்ணெய்மூலமாக அடிக்கடி முழுக்காட்டிபரிசுத்தமாய்வைத்துக்கொள்ளவேண்டும்.

(4) தினந்தோறும் காலையில்ஜல மலம் கழித்து, ஸ்நாநம் செய்து அவரவர் சமய முறைக்கு ஏற்ப சந்தியா வந்தனாதிகள் செய்த மேல், ஐந்து நிமிஷமாவது ஏகாந்தம் கொண்டு, இந்த வியாதி நம்மூரை விட்டு விலகிப்போகவேண்டு மென்றும், ஜனங்கள் க்ஷேமம்பெறவேண்டுமென்றும் சிரத்தா பக்தியுடனே ஒரே நினைப்பாய் ஈசுவரனை பிரார்த்தனை செய்யவேண்டும்.

(5) கோவில்கள் இருக்கின்ற ஊர்களில், தேசம் க்ஷேமம் பெறவேண்டுமென்று ஈசுவரனை பிரார்த்தித்து, வந்தனை வழிபாடுகள் செய்யவேண்டும். ருத்ரம், சமகம், புருஷஸூக்தம் முதலான மந்திரங்களை சரியான பிராமணர்களின் மூலமாக ஜபித்து, கோவில்களிலுள்ள விக்கிரகங்களுக்கு அபிஷேகம் முதலானவைகளைச் செய்து, சிவ அல்லது விஷ்ணு நாமாவளிகள் மூலமாய் அர்ச்சனைகள் செய்வித்து, பரிசுத்தமாய் ஆராதிக்க வேண்டும்.

(6) தவிரவும், பிராமணர்கள் இருக்கின்ற ஊரில், ஆருண மந்திரத்தை சரியானபடி உச்சரித்து ஒருவர், இருவரைக்கொண்டு, சூரிய நமஸ்காரங்கள், அவ்வியாதி ஊரைவிட்டு அகலும் வரையாவது, செய்தல் நலம்.

(7) மேலும் ஈசுவரியால் எல்லா அரிஷ்டங்களும் நீங்கக்கூடுமாகையால், ஆலயங்களில் துர்க்கை முதலான சந்நதிகளில் லளிதா சகஸ்திர நாமாவளியை ஜபித்து விதிப்படி அர்ச்சனைசெய்தால் வியாதி நீங்கும். அப்படி இல்லாவிடினும் ஊராருடைய க்ஷேமத்தைக்கருதி பக்தி சிரத்தையுடனே லளிதா சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்தலும், தேவி பாகவதத்தை முக்கியமாய் அதின்பிற்பாதியில் உள்ள அத்தியாயங்களை பாராயணம் செய்தலும் மிக நன்மையைத் தரும்.

(8) இவ்விதக் கொடிய விஷ வியாதிகள் உண்டாகுவதற்கு ஜனங்களுடைய தீய எண்ணங்களும், தீய ஒழுக்கங்களும் ஈசுவர ஆராதனையை விடுதலும் காரணமென்று சூட்சும தர்சிகள் சொல்லுகின்றார்கள். இக்கருத்தைக் கொண்டே அடியில் வருமாறு திருமூலர் உபதேசிக்கின்றார்:—

ஆற்றரு நோய்மிகும் அவனி மழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற்றனே.

(9) ஆகையால் சரீர சுத்தத்துடன் மன சுத்தமும் ஈசுவர ஆராதனையும் ஜனங்களுக்கு இருக்கவேண்டும். ஜனங்களிடம் தபஸ் அதிகமாக ஏற்படவேண்டும்.

(10) இவ்விதம் செய்துவந்தால், விஷ வியாதிகள் அணுகா: ஜனங்கள் சுகமாய் வாழ்வார்கள். அவ்விதம் ஈசன் அருள் புரிவாராக.

---

## இந்தியருக்கு சக்கரவர்த்தி அவர்களின் மேமீ 24உ உள்ள ஸ்ரீமுகம்.

### அன்பின் வழியது என் அரசு முறை.

இப்போது மாக்ஷிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ் என்பார் அவர்கள், உலகமெங்கும் பரவியிருக்கிற பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் அரசாளும் சக்கரவர்த்தியாக ஆகியிருக்கின்றார்கள். அவர்கள் நம் இந்தியா தேசத்திலிருக்கின்ற ராஜாக்களுக்கும் ஜனங்களுக்கும் அன்பும் ஆதரவும் அமைந்த அடியில்வரும் ஸ்ரீமுகம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். அதின்சுருக்கம் "எம்அன்பிற்குரிய பிதாவானவர் விசனகரமாய் திடீரென்று இறந்துபோய் விட்டார். அவருக்குப்பின்னர் பெரிதும் பிராசீனமானதுமான ராஜ குலத்தில் இந்த ராஜாங்கத்தை ஆளும் பாத்தியதையை நாம் பெற்றிருக்கின்றோம். ராஜாவாகவும், சக்கரவர்த்தியாகவும் ஏற்பட்டிருக்கின்ற நாம், இந்திய ராஜாக்களையும் அரசாளும் மன்னர்களையும் நம்முடைய இந்தியாதேசத்தில் வசிக்கின்ற மற்றுமுள்ள பிரஜைகளையும், மிகப்பிரியத்துடன் இதன் மூலமாக சந்திக்கின்றோம். நாம் பட்டம் பெற்றிருக்கின்றோமென்ற விஷயத்தை இந்தியா தேசத்திலுள்ள பலஜாதியார்களும், பலமதஸ்தர்களும் பிரியமாகவும் மிக ஆதரவுடனேயும் அங்கீகரித்து,ராஜபக்தியையும்,ராஜபதவியைப் பெற்றிருந்த

வர்களுக்கு மேலான விசுவாசத்தையும் பக்ஷத்தையும், பெரியதாயும் ஆழமாயும்நீங்கள் வெளியிட்டு இருக்கின்றமையை யாம் உகந்து,அதற்காக மிகவந்தனம் மனப்பூர்வமாய்ச் செலுத்துகின்றோம். எல்லாருடைய ஸ்மரணையிலும்விசுவாசத்துடன்கொண்டாடப்படும்மகாராணி விக்டோரியா அம்மாள், 1858-ம்வருஷத்தில் இந்திய ராஜாங்கத்தை நேராகக்கொண்டுசெலுத்தவும், அவ்வுத்தரவாதத்தைவகிக்கும், காலத்தில்,இந்தியாதேசத்து ஆளும் மன்னர்களுக்கும்பொதுபிரஜைகளான ஜனங்களுக்கும் க்ஷேமகர்மானவும் நலமுள்ளவுமான உறுதிவார்த்தையைத் தெரிவித்தார்கள். அந்த அம்மையாரின் கம்பீரமான குமாரரும், என்பிரியமுள்ள பிதாவும், எல்லாராலும் நன்கு மதித்து கொண்டாடப்படும் இப்போது காலம்சென்ற சக்கரவர்த்தியுமானவர், அந்த அம்மையாருடைய திருவாக்கை, அது நிகழ்ந்து 50வருஷத்துக்குப் பிறகு உங்களுக்கு அவர்கள் அனுப்புவித்த கடிதத்தில் உறுதிப்படுத்தினர்கள். ஷை உயர்நலம் அமைந்த இரண்டு ஸ்ரீமுகங்களும் பெரிய ராஜாங்க முறைமையின் மேலானவும் கம்பீரமானவுமான உட்கருத்தை அடங்கப்பெற்ற சாசனங்களாம். இனி எம்காலமுழுவதும் அக்கருத்தைப் பற்றியே. அதினின்று கொஞ்சமேனும் வழுவாது, நாம்நடைபெறுவோம் காலம்சென்ற மகாராஜா அவர்களின் பிரியத்திற்கு இணங்கியும். அவர்நடத்திக் காட்டிய முறைப்படியும் ராஜஸ்திரீயுடனே நாம் 5 வருஷத்திற்கு முன்னர் இந்தியா தேசத்திற்கு வந்திருந்தோம். சரித்திரத்தில் பேர்போன அநேக ராஜாங்கங்களை நேரில் பார்த்தோம் அவ்வரசாளும் மன்னர்களுடன் உறவாடினோம் உரையாடினோம். பிராசீன நாசரீகத்தின் பலசின்னங்களையும் பார்த்தோம் பலஜனங்களையும் சந்தித்தோம். நாடுநகரங்களையும் கிராமங்களையும் கண்டோம். அவைகளைப்பற்றி ஆழமானவும் பிரியமானவுமான எண்ணங்கள் நம்மனதில் பதிந்து இருக்கின்றன. அவைகள் நம்மனதினின்று மங்காவாம். அவ்வற்புதமான யாத்திரையின் ஸ்மரணை எப்போதும் நம்மனத்தில் தங்கியிருக்கும். எம்முன் நிற்கின்ற பெரிய உத்தரவாதமான இந்த ராஜாங்கத்தைக் கொண்டு செலுத்தும் விஷயத்தில், பக்திசிரத்தையுள்ள உத்ஸாகத்துடன் உதவியாயிருப்பீர்களென்று, நாம் பூர்ணமாய் நம்புகின்றோம். நம்முடைய ஆளுகையானது எப்போதும் இந்தியா தேசத்தின் க்ஷேமத்தை